சக்ரவர்த்தினி

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VI. தொகுதி ௬. MADRAS, JUNE 1911. சென்னை, ஜூன்மீ 1911. NO. 11, பகுதி ௧௧,

புல்லறிவு.

புல்லறிவு என்பது அற்ப அறிவு. மாந்தர்களுள் புல்லறிவுடையோன் உலகில் இருப்பதைக் காட்டிலும் இறப்பதேமேல். ஏனெனில் புல்லறிவாளர்க்குத்தாங்கள் செய்யும் எந்தக் காரியத்திலும் நன்மை தீமை உணரும் தன்மையிருப்பதில்லை. அதனால் அவர்கள் பலர் பழிக்க ஆளாய் நிற்கவும் பலவிதத் துன்பத்திற்குள்ளாகவும் நேரிடுகிறது. இது யாவரும் அறிந்த விஷயம். இங்ஙனம் பலர் பழிக்கவும் துன்பத்தில் துடிக்கவும் உடம்பெடுத்த ஒருவன் இவ்வுலகில் இருந்தும் ஒன்றே இல்லாமல் ஒழியினும் ஒன்றேயல்லவா?

இந்த மானிடஜன்மம்பலகோடி ஜன்மங்களிற் செய்த புண்ணிய பலனாற் பெறக்கூடியதென்பர் பெரியோர். ஏனென்று விசாரிக்கப் புகுவோமாயின் உலகத்திலுள்ள அநந்தகோடி ஜீவராசிகளுள் மானிடனொருவனுக்கே நன்மை தீமை உணரும் அறிவு என்னும் அபூர்வசக்தி யிருக்கிறது. அத்தகைய அறிவு என்னும் சக்தி பலங்குன்றிச் சொரூப மில்லாம லிருக்குமாயின் அதுவே புல்லறிவு. அந்தப் புல்லறிவு எவனிடமிருக்கிறதோ அவனுக்கு உலகத்தில் துன்பந்தான் சித்திக்கும். அவன் செய்கையும் அவன் மனமும் யாவும் அவன் புத்திக்கேற்றபடி அற்பமானமார்க்கத்தைப் பின்பற்றி நிற்குமேயல்லாது, உலகத்திலுள்ள நல்லவர் பெரி

யோர் படித்தோர் இவர்களுடைய கொள்கையை அனுசரிப்பதிலாவது நீதி நூல்கள் முறையிடும் வழியிலாவது நிற்க இசையாது. புல்லறிவாளர் தனவந்தர்களா யிருந்தாலும் அவர்களுடைய தனம் நல்வழியிற் செலவிடப்படாமல் பாபவழிக்குச் சார்பாகச் செலவிடப்பட்டு இகபரமிரண்டிலும் தீங்கை விளைக்குமே தவிர நன்மைபயவாது. இது அவர்களைச்சார்ந்த குற்றமன்று. அவர்களை யொட்டி நிற்கும் புல்லறிவின் போக்கு இதுவேயாம். இது பற்றியே ஆன்றோர்—

தாமேயு மின்பமுறார் தக்கார்க்கு நன்றாற்றா
ரேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
யாக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவினார்.

என்று புல்லறிவாளரின் இலக்கணங்கூறினார். அதாவது

புல்லறிவாளர் தாமேயாயினும் பொருளாலாகும் இன்பத்தை யனுபவியார். அறிவொழுக்கங்களால் தகுதியுடையார்க்கும் ஈதலாகிய நல்லறத்தைச் செய்யார். துறவறத்திலும் சேர்தலிலர். உடல் செல்வம் முதலியன நிலையாமையை உணராமல் செல்வச் செருக்கில் இறுமாந்திருந்து மறுமைக்குரியவைகளைச் செய்யார். பயனில்லாத முயற்சியிலேயே தம் ஆயுளைக் கழிப்பார் என்பதாம்.

இது நிற்க, அரசமரத்தைப்பிடித்த பிசாசு பிள்ளையாரையும் பிடித்ததாம் என்னும் உலக வசனப்படி புல்லறிவாளரோடு கூடுவார்க்கும் அவர்களுடைய கதியே சம்பவிக்கும். இதுகொண்டே அற்பசிநேகம் பிராண சங்கடம், என்பதுமென்றறிக. ஆகவே அவர்களோடு சிநேகங்கொள்ளலும் தீங்குதரும். அறிவென்பது எல்லாருக்கும் இளம்வயதில் ஒருபடித்தேயாயினும் அது பெற்றோர்கள் பிள்ளைகளைப்பழக்குவதிலும் பின்பு அவர்களுடைய கல்வி கேள்விகளுக்கும் கூட்டுறவுக்கும் தக்கபடியும்

வித்தியாசம் அடைகிறது. நல்ல பழக்கமும் நீதி நியாயங்களைப் புகட்டக்கூடிய நூல்களிற் பயிற்சியும் பெரியோர் சகவாசமும் ஏற்படுமாகில் அறிவு தெளிவடைந்து உலகம் புகழத்தக்க பெருமையோடு விளங்கும். இவைகளுக்குமாறாக ஏற்படுமாயின் அறிவுதெளிவின்றி உலகம்இகழத்தக்கஸ்திதியில்நிற்கும். இதுவே புல்லறிவாகும்.

ஆகையால் குழந்தைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய அறிவு தெளிவுறுமாறு மேற் கூறிய நல்ல பழக்கங்களும் நற்சகவாசமும் பெற்று கல்விகேள்விகளிற்புத்தியைச்செலவிடுத்து உலகத்தில் பழிப்பைக் கொடுக்கும் புல்லறிவுக்கு இடம் கொடாமலிருக்க முயன்று வருவீர்களாக.

கடைசியாக நாம் கூறுவது யாதெனில், நல்ல நியாயங்களைக் கூறும் புத்தகங்களைக் கைவிடாதாண்டு அவைகள் கூறும் நெறியில் நடப்பீர்களாயின், நீங்கள் நன்மையை யடைவீர்களென்பது திண்ணம்.

ப—ர்.

பாலவிவாகத்திற்குக் காரணம்.

பாலவிவாகத்தை நிறுத்தவேண்டுமென்பது நம்மவருள் படித்துத் தற்கால நாகரீகமுணர்ந்த எல்லோருடைய கொள்கையாகவிருக்கிறது. இந்தப் பாலவிவாகம் நடந்து வருவது பெரும்பாலும் பிராமணருள்ளேயாம். இப்படி நடந்து வருவது வெகுநாளாயவழக்கமெனினும்இப்பொழுது சிலவருஷங்களாக மிதமிஞ்சி நடக்கிறது. அவர்களைப்பார்த்து மற்றவருணத்தவரும் பாலவிவாகத்தைக் கையாடஆரம்பித்திருக்கிறார்கள். இது ஒன்றிலுமட்டுமல்ல. மற்றெல்லாவிஷயத்திலும் பிராமணரைப்

போல் நடக்கவேண்டுமென்று முயல்கிறார்கள். அவர்களைப்போல் பூணூல் தரித்துக்கொண்டு நேம நிஷ்டைகளை யனுசரிப்பதொன்றைத்தவிர மற்றெவ்விதத்திலும் பிராமணரைப் பின்பற்றுகிறார்கள். அப்படிப் பூணூல் தரித்துக்கொள்ளலாமென்று எவரேனும் துணிந்து வெளிப்படுவாராயின் அதுவும் செய்து விடுவார்களென்பதில் தடையில்லை. இதற்கு மாறாகப்பிராமணர்கள் தங்கள் ஆசார விவாகாரங்களை நழுவவிட்டு இதரவருணத்தார்களும் செய்ய ஒவ்வாத ஒழுக்கங்களை யனுசரிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். இது காலக்கொடுமை. அவர்கள்பேரில் குற்றமில்லை. எந்த வருணத்தவரும் தத்தம் வருணத்து ஒழுக்கங்களை யனுசரிப்பதே உசிதமல்லாது தம்வருண ஒழுக்கத்தைவிட்டு இதரவருண ஒழுக்கத்தைத் தழுவல் மதியீனமும் சாஸ்திர விரோதமுமாம். பாலவிவாகத்திற்குக் காரணங் கூறப்புறப்பட்டு எதையோ பேசுகிறதாக நினைக்க வேண்டாம். பிராமணர்கள் கைபாண்டுவரும் துராசாரமாகிய பாலவிவாகத்தை மற்ற வருணத்தவரும் கொள்ளத்தலைப்பட்டு விட்டார்களெனச் சிலர்கூறுகிறார்கள். அதற்காக அந்த ஒருவிஷயத்திலுமட்டுமல்ல மற்றெல்லாவிஷயத்திலும் பிராமணரைப்போல் நடக்க முயல்கிறார்களென்று காட்டாவே இங்கு முதலில் விவரித்தாம். மற்ற வருணத்தவர் பிராமணர்களுடைய ஆசாரங்களை அனுசரிக்கத் தலைப்படுவானேன்? அதற்குக் காரணம் யாதெனில விடையாதாமோ தெரியவில்லை.

இது இப்படிநிற்க ; பாலவிவாகம், கூடாதென்றும் அதனால் அளவற்ற தீங்குகள் விளைகின்றனவென்றும் கல்வியிற் பெரியோர்களும் அனுபோகஸ்தர்களும் பத்திரகைவாயிலாக அடிக்கடி தெரிவித்துவரும் இக்காலத்திலும் அத்தகைய விவாகமுறை தடைபடாமல் நடைபெற்றுவருவது படித்தவர்களென்றும் நாகரீக மறிந்தவர்களென்றும், பாலவிவாகம் கூடாதென்றும் வாதிப்பவர்களுள்ளே தாமென்று உறுதியாய்ச்சொல்வோம். எப்படியெனில், இவர்களுடைய படிப்பு, நாகரீகம், பேச்சுயாவும் வரதக்ஷிணை யென்கிற கொடியவழக்கமாகிய சனீசுவரன் முற்படின்

மறைந்துவிடுகின்றன. பாருங்கள், பெண்வீட்டார் தக்கவரன் போய்விடுகிறதே யெனக்கருதி போட்டி போட்டுக்கொண்டும் சிபார்சுக்கடிதம் பெற்றும் ஆயிரத்திற்கு இரண்டாயிரமாக வரதக்ஷிணை கொடுத்துத் தங்கள் பெண்ணுக்கு விவாகத்திற்குத் தக்க வயது வராதிருக்கும்பொழுதே முற்படுகிறார்கள். இதேமாதிரி பிள்ளைவீட்டாரும் ஆயிரம் இரண்டாயிரம் வரதக்ஷிணை பெறுவது தங்கள் பிள்ளை பரீக்ஷையில் தேறாமற் போய்த் தடைபடுமோ என்கிற பயத்தால் தங்கள் பிள்ளைக்கு விவாகவயது வராமலிருக்கும் போதே விவாகம் நடத்திவிடுகிறார்கள். இப்படி நடப்பது படித்து உத்தியோகஞ் செய்பவர்களுக்குள்ளேயே யல்லது சாதாரணமாய் கிராமங்களில் வசித்து விவசாயஞ்செய்து ஜீவித்து வருபவர்களிடம் காணப்படுவதரிது. அவர்கள் தங்களுக்கு ஏற்றபடி வரனைத் தேடிக்கொள்கிறார்கள். அவர்களுள்ளும் பாலவிவாகம் நடக்கின்றது. நடக்கவில்லையென்று கூறமுடியாது. அவர்கள் வழக்கத்தை அனுசரித்தும், இம்மாதம் சுதேசமித்திரனில் நாமது சகோதரி அலர்மேலு மங்கையம்மாள் பாலவிவாகத்திற்கு காரணமாகக் கூறியவற்றுளொன்றாகிய வீட்டுக்கிழவிகளின் தூண்டுதலுமாம். கேவலம் வரதக்ஷிணைப் பணத்தையுத்தேசித்தன்று. ஆகவே பால விவாகத்திற்கு முக்கிய காரணம் வரதக்ஷிணையே யல்லாது வேறல்லவென்று கூறலாம். வரதக்ஷிணை. வாங்குவது கெட்ட வழக்கம் மென்றும் அதை முற்றும் வழக்கத்திலிருந்து நீக்கவேண்டுமென்றும், அதுதான் பாலவிவாகத்திற்குக் காரணமென்றும் பன்முறையும் தங்கள் வாய்கொண்டுகூறியபலரும் தாங்கள் பேசியதை மறந்து சமயத்திற்குத் தக்கபடி காரியத்தை முடித்துக் கொள்கிறார்கள். இவர்களே ஆசாரத்திருத்தக்காரர்கள் என்றும் கூறிக்கொள்கிறார்கள். சபையில கூச்சமின்றிப் பேசுகிறார்கள். இப்படியிருக்கின் நம் கொள்கையெப்படி முன்னுக்குவரும்? இப்படிப் பேசுவதொன்று நடப்பதொன்று என்று இருப்பதில் ஒன்றும் முடியப் போவதில்லை. பேசியபடியே நடத்தையிலுமிருக்கவேண்டும். அப்பொழுதுதான் எதுவும் கைகூடும. இந்த பாலவிவாகத்தை தடுக்க

வேண்டுமானல் முதலில் வரதக்ஷிணை வாங்கும் துர்வழக்கத்தை நீக்கவேண்டும். வரதக்ஷிணை விஷயமொழிய வேண்டுமாயின் ஸ்மார்த்தருள்ளிருந்துவரும் பலவகுப்பும் ஒன்ருகவேண்டும். இவ்வனமே மற்ற வருணத்தாருள்ளும் என்றறிக.

தனகோடி.

அவுரங்கசீப் மரணத்திற்குப் பின் பல குடியரசர்கள், டெல்லியில் அரசாண்டு வந்த மொகலாயச் சக்கரவர்த்திக்கு இறை செலுத்துவதை யொழித்து, தங்கள் தங்கள் சொந்த ராஜ்யங்கள் ஏற்படுத்தலானுர்கள். இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட அனேக சிறிய ராஜ்யங்களில் சண்டை சச்சரவுகளும், மகம்மதியர்கள் மற்ற மதஸ்தர்களை இம்சிப்பதும் அதிகரித்திருந்ததென்று நம்மவர் நன்கறிவார்கள்.

அக்காலத்தில் பீஜபூர் என்ற சிறு ராஜ்யத்தில் வசித்த தனகோடி என்னும் வைசியப்பெண்ணின் சரிதையைக் கூறுவோம். வைசியர்கள் வியாபாரத்திலேயே கருத்தாயிருந்து அதி தனவந்தர்களாயிருப்பார்க ளென்பது உலக வழக்காயிருந்தபோதிலும் தனகோடியின் தகப்பனுர் ராமலிங்க செட்டியார் ஐசுவரியவானல்லர். அவருக்குத் தெய்வபக்தி அதிகம். ஒரு போகியைப் போல பகவத் கைங்கர்பத்திலேயே தன் காலம் முழுதும் கழித்து வந்தார்.

தனகோடி அதிரூபாவதி. அவள் தக்க பருவமடைந்ததும் ராமலிங்கசெட்டியார் அவளைத் தன் மனதிற் கிசைந்த ஒருவனுக்குக் கன்னிகாதானம் பண்ணுவதாய் நிச்சயித்துக் கல்லியாணமும் வெகு சம்பிரவமாய (யாதொரு குறைவுமின்றி) நடந்தது. மருமகப் பிள்ளையும் அதிகப் பணக்காரனல்லன்.

பாலிகை நீரில் விடும்பொருட்டுக் கடைசி நாள் குளக்கரைக்குப் போகையில், ஊரில் பெரிய பணக்காரனுன அப்துல்வாஹப் என்னுமொரு மகம்மதியன் தனகோடியைக் கண்டு மோகங் கொண்டான். அவனுக்கு எப்படியாவது அப்பெண்ணைத் தன் வசப்படுத்த வேண்டுமென்ற அவாமேலிட்டது.

அவன் தன்னெண்ணத்தை நிறைவேற்ற முரட்டு வழிகளிற் பிரவேசிக்கவில்லை. ஆனாலும் அவனப்பெண்ணை வெகு தந்திரமாகத் தன் வசப்படுத்தினன். அது பின் வருமாறு.

சிறிது காலத்திற்குள் அப்துல் ராமலிங்க செட்டியாரைத் தன் நண்பராக்கினன். அப்பால் அவன் ராமலிங்க செட்டியார் வீட்டிற்கு அடிக்கடி போவதும் வருவதுமாயிருந்தான். செட்டியார் அவனை உண்மைச் சினேகனென்றே முற்றும்நம்பியிருந்தார். இப்படி சுமார் இரண்டுமாதகாலங்கழிந்தது. வாஹப்செட்டியாரிடம், "ஐயா, உமது மகள் விவாகத்திற்கு நான் எதுவும் பரிசளிக்கவில்லையே, எனக்கு நேற்றுத் தெற்கே தஞ்சாவூரிலிருந்து சில வெகு நாணயமான நகைகள் வந்திருக்கின்றன. அவைகளிற் சில நான் உமது மகளுக்குப் பரிசாக அனுப்புகிறேன். அத்துடன் (இது குளிர்காலமான படியினல்) ஒரு நேர்த்தியான காஷ்மீர சால்வையும் அனுப்புகிறேன். அவைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்" என்று மிக வணக்கமாய்க் கூறினர்.

"நவாப் அவர்கள் இஷ்டத்தை மறுத்தலு முண்டோ?" என்று செட்டியார் விடை பகர்ந்தார்.

மறுநாள் வேலைக்காரி யொருத்தி வாஹப் வீட்டிலிருந்து நகைகளும் காஷ்மீர சால்வையும் செட்டியார் வீட்டிற் கொடுத்துக் கொண்டுபோனாள். செட்டியார் அவ்வேலைக்காரியைத் தன் மகளிடத்திற்கே நேரில் அனுப்பினர்.

வேலைக்காரி.—அம்மா, என்னுடைய எஜமானன் இந்தநகை முதலியவற்றைத் தங்களுக்குப் பரிசாக (தங்கள் தகப்பனாரனு

மதியின் பேரில்) அனுப்பியிருக்கிறார். தாங்களிவைகளைத் தயை கூர்ந் தங்கீகரிக்க வேண்டும்.

இத்தனை நாளாய்த் தன் வீட்டிற்கு வருவதும் போவதுமா யிருந்த வாஹப்பின் அழகையும் வலிமையையும் கண்டு மகிழ்ந்த தனகோடி மஹா கனம் பொருந்திய சாயப் அவர்களே எளியோர்களாகிய என் தகப்பனாரையு மென்னையுமொரு பொரு ட்டா யெண்ணிப் பரிசனுப்பினால் நான் மறுப்பேனா? கனவிலுங் கூட மறுக்கமாட்டேன். சாயப் அவர்களுக்கு வந்தனம் என் றாள். இதைக்சேட்டு சாகிப் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

இவ்வாறு பேசிவிட்டு ஆபரணங்களை யணிந்துகொண்டாள். எப்பொழுதும் நல்ல நகை போடாதிருந்தவளுக்கும் புதிதாய் நகை போட்டுக்கொள்ளவே ஓர்வித ஆனந்த முண்டாயிற்று. எதிரிலிருந்த நிலைக்கண்ணாடியில் தன்னுருவத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

வேலைக்காரி.—அம்மா, இவ்வளவுக்கே நீர் கரைகொள்ளா மகிழ்ச்சி யடைகிறீரே; வாஹப் அவர்களுடைய பத்துப் பெண் சாதிகளில் ஒவ்வொருத்தியும் அணிந்திருக்கு மவ்வளவு ஆடை யாபரணங்களிருந்தால் தாங்கள் எவ்வளவு சந்தோஷப்பட மாட் டீர்கள் என்றாள்.

நகை யென்றால் சாதாரணமா யிக்காலத்துப் பெண்கள் கூட பிராணனையும் கூட விடுவது சகஜந்தானே. அக்காலத்து தன கோடி என்ன செய்வாள் பாவம். தானும்வாஹப்பினுடைய மனை விகளி லொருத்தியாயிருக்கப் பாக்கியம் பெறவில்லையே யென்று மனம் நொந்தாள். பிறகு வேலைக்காரியைப் பார்த்து, "வாஹப் அவர்களின் பெண்சாதிமார்களல்லவோ பாக்கியசாலிகள். இறந் தால் மறுவுலகத்தில் இச்சம்பத்துகளெல்லா மனுபவிக்கப் போகி றோமா. எனக்கு இவ்வுலகில் கூட ஐசுவரிய மில்லையே." என்று கூறினாள்.

வேலைக்காரி சமயமறிந்து "அம்மா, மனம் நோவதினால் பயனென்ன? எல்லாம் பூர்வீகத்திற் செய்த புண்ணிய பயனன்றோ? நம்மாலாவதென்ன விருக்கிறது? எனக்கு உத்தரவளிக்கவேண்டும்" என்றான்.

"சரி போய்வரலாம்; எளியேனாகிய என்னை நீ அடிக்கடி வந்து கண்டு பேசிக்களிக்கச் செய்து போகவேண்டு மென்பதே என்னுடைய பிரார்த்தனை." என்று விடை பகர்ந்தான். அது முதல் தனகோடியம்மாள் எல்லா வேளைகளிலும் வாஹப் மனைவி மார்களின் பாக்கியத்தையும் தன் தௌர்ப்பாக்கியத்தையும்பற்றி எண்ணமிட்டிருந்தாளே தவிர வேறெதினும் தன் மனதைச் செலுத்தவில்லை.

வாஹப் வீட்டு வேலைக்காரி முதலில் இரண்டு மூன்று நாளைக்கொரு முறை தனகோடியம்மாளிடம் வந்து வாஹப்பின் ஐசுவரியத்தையும் அவன் மனைவி மார்களணிந்திருக்கும் நகைகளின் சிறப்பையும் பற்றிப் பேசிப்போவாள். இதனால் தனகோடியம்மாளுக்கு நகைகளின் மேலுண்டான ஆசை முன்னிலும் பதின்மடங் கதிகரித்தது. கொஞ்சம் பழக்கமானபின் வேலைக்காரி தினந்தோறும் வர ஆரம்பித்தாள். சில நாட்களில் இரண்டு வேளைகூட வருவதுண்டு. இப்படியிருக்க, ஒருநாள் இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் தனகோடியம்மாள் சொன்னதாவது.—"என்ன விதிவசம். என் புருஷனும் என்னைப்போலவே ஏழ்மை ஸ்திதியிலிருக்கிறானே. எனக்கு யார் ஆபரணங்கள் வாங்கித் தருவார்கள். என்னை என் தகப்பனார் வாஹப் போன்ற பணக்கார னொருவனுக்கு மணஞ்செய்து கொடுத்திருக்காலகாதா?" என்றாள்.

வேலைக்காரி யிதையெல்லாம் வெகு கவனமாய்க் கேட்டுக்கொண்டு வீடு சென்றதும் தன் எஜமானனிடம் கொஞ்சங்கூடப் பிசகாமல் எல்லாவற்றையும் கூறினாள். எப்பொழுது சமயம் வாய்க்குமென் றுவலுட னெதிர்பார்த்திருந்த வாஹப் தனக்கு

நல்ல சமயம் வாய்த்ததே யென்று களிகூர்ந்து வேலைக்காரிக்கு வெகுமதி கொடுத்தான்.

அவள் தனக் குடன்பட்டு மகம்மதிய மதத்திற் சேர்ந்து தன்னைக் கல்லியாணம் பண்ணிக்கொண்டால் எவ்வளவு சுகமாய் வாழலாமென்று பலவிதமாய்க் கடிதங்களெழுதியும், தன்மேலு ள்ள காதல் அதிகமாகும் பொருட்டு அநேக ஆபரணங்களைப் பரி சாக அனுப்பியும் தனகோடியைத் தன் வசமாக்கினான். பின்பு இரண்டொருநாள் கழித்து தனகோடி வாஹப்புக்குப் பின் வரு மாறு கடிதமெழுதினாள்.

என் பிரிய முள்ள காதலர்க்கு,

நான் எப்படியாவது உம்மிடம் வந்து வாழவேண்டுமென்று நிச்சயித்து விட்டேன். ஆனால் நான் எப்படி என் வீட்டை விட்டு வெளிவருவதென்று தெரியாமல் தவிக்கிறேன். தாங்கள் என்னை என் வீட்டிலிருந்து தங்கள் வீட்டிற்குக்கொண்டுபோகத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென் றெதிர்பார்த்திருக்கும்,

தங்கள் மீது காதல்கொண்ட தனகோடி.

இக்கடிதத்தைக் கண்டதும் வாஹப்புக்குண்டான சந்தோ ஷத்திற் களவே கிடையாது. தான் நினைத்த பிரகாரம் காரியம் சித்தியாகுமென்று தனக்குள் நிச்சயித்தான். தனகோடியம்மாளை யெப்படித் தன் வீட்டிற்கழைத்து வருவதென்பதைப் பற்றிச் சில நாள் யோசித்துக் கடைசியாகப் பின் வருமாறு தனகோடி க்கு நிருபமெழுதி யனுப்பினான்.

என் பிரியமுள்ள தனகோடி,

நீ இரண்டு நாளைக்கு முன்னெழுதிய கடிதத்தைப் பார்க்க வெனக்கு அதிகச் சந்தோஷமாயிற்று. நீ எப்பொழுது என் வீடு வந்து கூடிச் சுகித்திருப்பாயோ அதுவே என்பாபமெல்லாம் நீங் கிய நாளாகும். அடுத்த ஞாயற்றுக்கிழமை என் மூத்த மகனு

டைய் பிறந்த நாள். அன்றைய தினம் என் வீட்டில் நடக்கும் பாட்டுக் கச்சேரிக்கு உன்னையும் உன் தகப்பனுரையும் என் வீட்டிற்கழைத்து வந்து கச்சேரி முடிந்ததும், நீ என் மனைவிமார்களிடம் பேசிக்கொண்டிருப்பதாய்ச் சொல்லி, உன் தகப்பனுரை வீட்டிற்கனுப்பி விடுகிறேன். நீ அப்புறம் இங்கேயே நின்றுவிடலாம். இக்கடிதம் நம்மிருவருக்குள் இரகசியமாயிருக்கட்டும்.

உன்மேல் அளவற்ற காதல்கொண்ட அப்துல்.

இக்கடிதத்தைக் கண்டதும் தனகோடிக் குண்டான சந்தோஷத்திற் களவுகிடையாது. எப்பொழுது ஞாயற்றுக்கிழமை உதயமாகுமென்று ஆவலுட னெதிர்பார்த்திருந்தாள். இச்சமயத்தில் அவளுக்கு ஒருநாள் கழிவது ஒருயுகம் போலிருந்தது. அவள் தன் மனதைவேறெந்தக் காரியத்திலும்செலுத்தவில்லை. எப்பொழுதும் அப்துலைப் பற்றியே நினைத்துக்கொண்டு பிரமை பிடித்தவள் போலிருந்தாள். (இன்னும் வரும்.)

T, M. Sundaravaradachari.

லோபி நாடகம்.

[சக்ரவர்த்தினி 5 வது தொகுதி 9 பகுதியின் தொடர்ச்சி]

3-வது களம் தொடர்ச்சி

ஹார்:—நல்லது போய்வரலாம்.

லாபினேக்:—(மெதுவாக அப்பா! உத்தரவு பெற்றது வெகு விசித்திர மாயிருக்கிறது.

ஹார்:—நீ சத்தியமாக ஒன்றையும் எடுத்துக்கொண்டு போகவில்லை யென்றெண்ணுகிறேன்.

களம் IV

ஹார்ப்பகன் ஏகாந்தமாக.—(1) ஒரு போக்கிரி வேலைக்காரப்பயல் என்ன பாடு படுத்துகிறான்பார்! அந்த நாய் பார்க்கும் படியாக நான் ஒன்றும் செய்யவில்லை. நிச்சயமாக ஒருவன் ஏராளமான திரவியத்தைக் காத்துக்கொண்டிருத்தல் சாத்திய மான காரியமல்ல; தனக்குச்செலவுக்கு வேண்டியவைகளை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவைகளை வட்டிக்கு விட்டிருப்பவன் அதிருஷ்டசாலிதான். ஒருவனுக்கு ஒரு வீட்டில் சரியான இடம் கிடைக்காமற் போவதில்லை; எனக்கோ சரியான இடம் ஒன்று அகப்பட்டிருப்பதும் அதனில் நான் என் ஆஸ்திகளை வைதிருப்பதும் சரியான இடம் தான். திருடர்களுக்கு நம்மிடம் சரியான வேட்டையிருப்பதால், முதலில் அவன் பார்க்கக் கூடியதாயில்லை.

களம். V

ஹார்ப்பகனும் எலிஸாவும் கிளேயாந்தும் ஒன்று கூடிச் சம்பாஷித்தல்

ஹார்.— (தான் தனிமையாக இருப்பதாக நினைத்துக்கொண்டு) இருந்தாலும் நேற்றுக்கிடைத்த பதினாயிரம் எகியூவையும் தோட்டத்துமூலையில் புதைத்தது சரியோ, இல்லையோ தெரியவில்லை. பதினாயிரம் எகியூ தங்கமா—என்னிடம்—அப்பா பெருந்தனம் (திரும்பியபோது எலிசாவையும் கிளேயாந்தையும் கண்டு) சிவ சிவா! என்னாலேயே நான் மோசம் போகிறேன். உஷ்ணம் தாங்க முடியவில்லை; தனியாக இருப்பதாக நினைத்தல்லவோ உரக்கப்பேசி விட்டேன். (கிளேயாந்தையும் எலிசாவையும் பார்த்து) என்ன அது?

கிளே.—ஒன்றுமில்லையப்பா.

ஹார்.—நீ வெகு நாழிகையாகவிருக்கிறாயோ?

எலிசா.—இல்லை இப்பொழுது தான் வருகிறோம்.

ஹார்.—நீங்கள் கேட்டுக்கொண்டிருக்......

கிளே.—என்ன அப்பா?

ஹார்.—அந்த

எலிசா.—என்ன?

ஹார்.—நான் சொல்லிக்கொண்டிருந்ததை.

கிளே.—இல்லை.

ஹார்.—உண்மையா?

எலிசா.—உண்மையாய்.

ஹார்.—நீங்கள் சிலவார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு வந்ததாகக் கண்டேன். நான் இன்று பதினாயிரம் எகியூ ஒருவனுக்கு இருந்தால் நல்லதென்றும், அவன் அதிக அதிருஷ்டசாலி என்றும் சொன்னேன்.

கிளே.—முதலில் நாங்கள் உள்ளேவரச் சற்றுச் சந்தேகப் பட்டோம்.

ஹார்.—நீங்கள் அப்படி யாதொன்றும் பிசகான காரியங்களைச் செய்ய மாட்டீர்களென்று சொல்லுவதைக் கேட்க வெகு சந்தோஷம். ஆனால் என்னிடம் பதினாயிரம் எகுயூ விருப்பதாக நினைத்தீர்களோ?

கிளே.—உங்கள் விஷயத்தில் நாங்கள் ஒருபோதும் தலையிட மாட்டோம்.

ஹார்.—எனக்குப் பதினாயிரம் எகியூ உண்டாகும்படி கடவுள் கிருபை செய்யவேண்டும்.

கிளே.—நான்,

ஹார்.—நினைக்கவில்லை! அது எனக்கு நல்ல காரியமாகவிருக்கும்.

எலிசா.—அது.

ஹார்.—நல்ல எண்ணம் வேண்டும்.

கிளே.—நான்.

ஹார்.—அதனல் எனக்கு அதிக நன்மையுண்டு

எலிசா.—நீங்கள்.

ஹார்.—காலம் கெட்டதாயிருப்பதால் இப்பொழுது பயப்படுவதுபோல் பயப்பட வேண்டியதில்லை.

கிளே.—ஆ தெய்வமே! என்ன அப்பா!! தங்களுக்கு ஏராளமான திரவியமிருப்பதாகச் சொல்லிக்கொள்வதால் தாங்கள் பயப்பட வேண்டிய காரியமென்ன!

ஹார்.—என்ன! என்னிடத்தில் வேண்டிய பொருளா!! அதெல்லாம் சுத்தப்பொய். என்னிடத்திலொன்றுமில்லை. அப்படியெல்லாம் சில போக்கிரிப்பயல்கள் உளறுகிறார்கள்.

எலிசா.—கோபிக்க வேண்டாம்.

ஹார்.—என்மக்களே எனக்குச் சத்துருக்களாகி என்னை மோசம் செய்யப் பார்க்கின்றனர்.

கிளே.—நீர் திரவிய சம்பன்னர் என்று சொல்லுபவர்களெல்லாம் உமக்கு எதிரியா?

ஹார்.—ஆம். இப்படி பிதற்றுதலும்; நீ செய்யும் வீண்செலவும் ஒருவன் கொடைப்பணக்காரனுக விருக்கும்படி காட்டும்.

கிளே.—நான் என்ன பெருஞ்செலவு செய்கிறேன்.

ஹார்.—என்னவா? நீ தெருவில் விட்டிருக்கும் அந்த சொகுசான வண்டி யொன்று போதாதா? நேற்றுஉன் தங்கையோடு சண்டைபோட்டேன். அவள் தெய்வத்தைவேண்டுகிருள். நீ உச்சி முதல் உள்ளங்கால் வரையில் மூடிக்கொள்ள உனக்கு அதிகப்பணம் வேண்டும்? நீ பிரபுவைப்போல் உடுத்துக்கொள்ளுகிறாய்; அப்படியெல்லாம் செய்தால் நான் வெகு சீக்கிரத்தில் ஏழையாய்ப் போவேன்.

கிடே.—என்னால் எப்படி நீர் ஏழையாய்ப் போவீர்.

ஹார்.—என்னைப்பற்றி என்ன சொன்னேன்? இப்படி யெல்லாம் செலவுசெய்யப் பணத்துக்கு எங்கே போகிறது?

கிளே.—நானா? விளையாட்டாவது! நான் சந்தோஷமாயிருக்க எனக்குக் கொடுபடும் பணங்களைச்செலவழித்துக் கொள்ளுகிறேன்*

ஹார்.—அது கெட்டவழக்கம். நீ சௌக்கியமாக விருக்கவேண்டுமானால் உனக்கு வரும் வரும்படியை வட்டிக்குக் கொடுக்கவேண்டும். பிறகு அவைகள் எதேஷ்டமாயிருக்கும். மற்றது ஒன்றும் சொல்லவில்லை. இப்பொழுது நீ தலைமுதல் கால்வரையில் போட்டிருக்கும் இந்த நாடாக்களால் என்ன பிரயோஜனம்? இந்தக் குதிரையை நாமேபார்த்துக் கொள்ளக் கூடாதா? இவைகளைக்குறைத்தால் 20-பிஸ்தோல் † குறையும். குறைந்ததை ஒன்பது வட்டிக்குக் கொடுத்தாலும் பதினெட்டுப் பவுன் எட்டுப்பென்னி கிடைக்கும்.

கிளே.—சரிதான்.

ஹார்.—அதை விட்டுவிட்டு மற்றதைப் பார்ப்போம், (அதற்குள் மகனும் ஜாடை செய்வதைக்கண்டு) ஹா! (மெதுவான குரலில்) அவர்கள் நமது திரவியமூட்டையை கொள்ளையடிக்க ஜாடை செய்கிறாப் போலிருக்கிறது. (உரக்க) ஏன் அப்படி விழிக்கிறாய்?

எலிசா.—எங்களுள் யார் முந்திப் பேசுகிறது என்பதைப் பற்றி யோசிக்கிறோம்; எங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்லவேண்டியிருக்கின்றன.

---

*மேல்நாட்டில் மக்கள் வயது வந்தபின் அவர்கள் செலவுக்கு வருஷவாரி இவ்வளவு என்று கொடுப்பது வழக்கம். அதனை அவர்கள் இஷ்டம்போல் செலவு செய்யலாம்.

† பிஸ்தோல், ஒரு நாணயம்.

ஹார்.—எனக்கும் உங்கள் இரண்டுபேரிடமும் சில சங்கதி சொல்ல வேண்டியிருக்கிறது.

கிளே.—நாங்கள் கல்லியாணத்தைப்பற்றி பேசப்போகிறோம்.

ஹார்.—நான்கூட அதைப்பற்றித்தான் சொல்லப்போகிறேன்.

எலிசா.—அப்படியா! அப்பா!!

ஹார்.—ஏன் அந்தக் குரல்? என் கண்மணி அந்த வார்த்தையா அல்லது காரியமா உன்னை வருந்தும்படி செய்கிறது.

கிளே.—கல்லியாண விஷயம் எங்கள் இரண்டுபேரையும் வருத்த வில்லை. ஆனால் நீங்கள் ஏற்படுத்தும் வரன்கள் ஏற்றதோ இல்லையோ வென்ற சந்தேகந்தான்.

ஹார்.—சற்றுப்பொறு. ஒன்றும் பயப்படாதே உங்கள் ஒரு வருக்கும் குறைவில்லாதபடி நான் செய்கிறேன். முதலில், இந்தத்தெருக்கோடியில் மரியளென ஒருபெண் இருப்பதைப் பார்த்திருக்கிறாயா?

கிளே.—ஆம், தெரியும்.

ஹார்.—உனக்கு?

எலிசா.—அவளைப்பற்றி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஹார்.—அந்தப்பெண் எப்படி?

கிளே.—வெகு இலக்ஷணமான பெண்.

ஹார்.—அவள் குணம்?

கிளே.—வெகு யோக்கியமும். கபடமுமில்லாதவள்.

ஹார்.—அவள் நடவடிக்கைகள்?

கிளே.—சந்தேகமில்லாமல் குற்றமற்றது

ஹார்.—ஒருவர் மதிப்பதைவிட மேலான குணமுடையவளல் லவோ?

கிளே.—ஆமாம்.

ஹாார்.—அவள் மனைவியானாலோ

கிளே.—வெகு சந்தோஷந்தான்.

ஹாார்.—வீட்டுக் குடித்தனத்திற்கு தகுதியுடையவள்.

கிளே.—சந்தேக மில்லாமல்.

ஹாார்.—அவள் கணவன் அவளைக் கண்டமாத்திரத்தில் சந்தோஷ முடையவனாவன்.

கிளே.—நிச்சயம்.

ஹார்—ஆனால் ஒரே ஒரு கஷ்டமிருக்கிறது. அவனுக்கு அதிக ஸ்திரீ தனம் கிடைக்காது.

கிளே.—ஒரு நல்லபெண்ணைப் பார்க்கும்போது ஸ்திரீ தனத்தைப்பற்றி யோஜிக்கவே கூடாது.

ஹார்.—கிடக்கு, கிடக்கு, ஒருவருக்கு ஒன்று இல்லாவிட்டல் மற்றொன்றை நிரவிக் கொள்ளுகிறதோ ?

கிளே.—சரிதான்.

ஹார்.—கடைசியாக 'நீங்கள் எல்லாம் நான் நினைத்தபடி சொல்லுகிற படியாலும், அவளும் குணவதியான படியாலும் அவளை எனக்கு வதுவை செய்துகொள்ள இஷ்டந்தான்; ஆனால் ஸ்திரீதன மில்லையே.

கிளே.—ஹா !

ஹார்.—என்ன ?

கிளே.—தாங்கள் தீர்மானித்து விட்டீர்

ஹார்.—மரியளைக் கல்லியாணம் செய்துகொள்ள.

கிளே.—யார் ? நீர் ? நீர் ?

ஹார்.—ஆம். நான். நான். நான்தான். அதற்குச் சொல்லுகிறதென்ன ?

கிளே.—எனக்குத் தலை கிறுகிறுக்கிறது ஒன்றும் சொல்ல முடியவில்லை.

ஹார்.—அது ஒன்றுமில்லை, ஒரு பெரிய குவளை நிறைய குளிர்ந்ததண்ணீர் குடி.

(இன்னும் வரும்.)

Somasundram

DEPARTMENT OF AGRICULTURE, MADRAS.

COCOANUT BEETLES.

தென்னைமரத்து வண்டுகள்.

இரண்டு தினுசு வண்டுகள் தென்னை மரங்களையும் மற்ற பனை தினிசுகளையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தை யுண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும், மலையாளத்தில செள்ளுவென்றும் சொல்லப் பட்ட 1, 2-வது படங்களில் காட்டியிருக்கும் வண்டு. அது தலையில ஒரு கொம்பையுடைய கறுப்பு வர்ண முள்ள ஒரு பெரியவண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் மண்டை யிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னை மரங்களை இவ்வண்டுகள் துளைத்து ஜாஸ்தி நாசமாக்கு வதைப்போல் முற்றின மரங்களைக் கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளி லாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து 3-வது படத்தில் காட்டிய புழுக்களைப்போல் வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரிதாகிறது. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேல் சொன்ன வண்டாய் உருமாறுகிறது.

4, 5-வது படங்களில் காட்டியிருக்கும் வண்டு தமிழில் செவ்வண்டென்று சொல்லப்பட்டது. இது முன்சொன்ன கறுப்பு வண்டைவிடச் சின்னது. இதை அதனுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் சாதாரணமாய்த் தென்னம் வண்டாலாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டைகள் வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் 6-வது படத்தில் காட்டியிருக்கும் புழுக்கள் உச்சிமரத்தைத் துளைத்துச் செடிகளைக்கொன்றுவிடும். 7-வது படத்தில் காட்டியபடி இப்புழுக்கள் நார் இழைகளைக்கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டுவாரங்களில் உருமாறி வண்டுகளாகிறது.

இவைகளின் கேடிதிகளை மாற்றக்கூடிய பிரயத்தனங்கள்.

தென்னம் வண்டு தான் ஜாஸ்தி கெடுதி செடிகளுக்குச் செய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்குக் காரண பூதமாயிருக்கிறது. இந்தத் தென்ன வண்டை அநேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல் வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் ஊசிகொண்டு எடுத்துவிடலாம்.

2. இவ்வண்டுகளை அப்புறப்படுத்தினபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளை தாரினால்தடவி மண் காண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேற்சொன்ன தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும்: இவ்வண்டுகள் முட்டைவைத்தபின் மரங்களை இவைகளின் பாதையிலிருந்து சுலபமாய் நிவர்த்திக்கமுடியாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம்வண்டை துரத்திவிட ஏதுவுண்டு:

4. செவ்வண்டினால் பிடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டாது. ஆகையால் அவைகளைத் தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாகமாறிப்புதுமரங்களை நாசமாக்கும்.

5. ஒரு தோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீரிபுடைத்து காயப்போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவேகூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம்வண்டு பல்கிப் பெருகும். தோட்டத்துக்குள் எந்த விதமான வஸ்துவும் அழுகிக்குவிய இடங்கொடுக்கக்கூடாது.

6. சில இடங்களில தென்னமரத்து செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக் கெடுக்கிறதென்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆகையால் மேல்தரையிலிருந்து சில அடிகளுக்குமேல் மரத்தைத் துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேற்சொன்ன பிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிகஷ்டத்தை யுண்டுபண்ண வதுவாகும். ஆகைபால் அப்படிச் செய்யவேகூடாது.

மேற்சொன்ன இரண்டு வண்டுகளின் நாசம் ஒன்றை ஒன்று பொருத்ததாயிருக்கிறது. தென்னம்வண்டு நன்றாயிருக்கும் உச்சி மரங்களில் துளைகளை புண்டாக்கி செவ்வண்டு அதில்வந்து சேர இடத்தை புண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் செத்துப்போன மரங்கள் தென்னம்வண்டுகள் பல்கிப்பெருக நல்ல வாசஸ்தானமாகிறது. ஆகைபால் மேற்சொன்ன முன்ஜாக்கிரதையோடு

கவனம் செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடித்த தென்னம்தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றால் நாசமாவதைத் தடுக்கமுடியாது.

ஸி. ஏ. பார்பர்.

சர்க்கார் தாவர சாஸ்திரி.

இதோபதேசம்.

I. உலகம் அரசனால் ரட்சிக்கப்படுகிறது. அரசனில்லாத தேசங்கெடும். அரசனில்லையாயின் உலகத்தில் தர்மம் நடைபெறாது. உலகம் தடுமாறின் அதை நிலைபெறச் செய்பவன் அரசனே. கலக்கமுண்டாயின் தர்மங்கெடும். தர்மங்கெடுமாயின் உலகம் பாழாம். உலகம் நிலைபெறுவது அரசனாலேயே ஆகையால் அரசனுக்கு யாதொரு தீங்கும் நினைக்கலாகாது. ஆகையால் தர்மத்தினால் இகபரசுகமுண்டாகுகிறது. அதற்குக் காரணமாகவிருந்து உதவிபுரியும் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

II. மானுட ஜென்மமெடுத்தவர்கள் யாவரும் உலகத்தில் கௌரவத்தைப் பாராட்டவேண்டும். கௌரவபுத்தி எவனுக்கிருக்கிறதோ அவனையே உலகம் வணங்கும். அவனிடமே லக்ஷ்மி கடாட்சம் நிலைத்திருக்கும். கௌரவத்தை விட்டவன் மனிதனிற் சேர்ந்தவனல்ல. வயிறு நிறையவேண்டியதுதானேயென்று கௌரவத்தையிழந்து அற்பபுத்தி யுடையவனாயிருந்து இவ்வுலகத்தில் உயிர் தரிப்பதிலும் இறந்தொழிதல் மேன்மை.

III. கனவிலும் கடவுள் திருவடியை மறத்தல் கூடாது. ஐம்பொறிகளின் வழியே மனதைச் செல்லவிடுதல் தீமைதரும்.

புண்ணிய கருமங்களைச் செய்வதையே பெரும் விருதமாகக் கொள்ளவேண்டும். நாம் எப்படியிருந்தாலும் புத்தி பூர்வமாக வேனும் அபுத்தி பூர்வமாகவேனும் ஏதாவது பிழைகள் செய்வ தியற்கை. மானுடன் எக்காலத்தும் எவ்வகைப்பட்ட பிழையை யும் செய்யாதிருத்தல் முடியாது. அப்படிப் பிழைசெய்யாதிருப் பின் அவனே தேவன், அப்படி யிருத்தல் அசாத்தியம் என்றே முதறிஞர்,

குறைகளே செய்வதே குணமெனக் கண்டனம்
பொறைகளே செய்வதெம் புகழெனக்கண்டன
மிறைவ மற்றவ்விரண்டையே யலால் யாமெடுத்
தறைவதொன்றில்லைபா லன்று தொட்டின்றுமே.

என்று ஈசனிடத்து முறையிட்டுத் துதித்திருக்கிறார்கள். ஆகை யால் அபுத்தி பூர்வமாக எப்போதாவது பிழைகள் செய்வோ மாகையால் அதை பொழிப்பது கூடாமற் போயினும் புத்தி பூர்வமாகப் பிழைகள் செய்ய இடங்கொடாமல் ஈசனைப்பூஜித்து வரவேண்டும்.

IV. "எல்லா மறிந்தவரும் ஏது மறியாதவருமில்லை" இதனையறியாத சிலர் எல்லாமறிந்தவராக வெண்ணி அகங்கரித்து நல்லோர் பெரியோரை இலட்சியம் செய்யாமல் தங்கள் மனம் போனவாறு திரிந்து கடைசியில் கெடுகிறார்கள். "எந்த புத்தில் எந்தப் பாம்பிருக்குமோ யார்கண்டது" என்பது உலகவழக்கம் அதுபோல் இன்னாரிடத்து இன்னசக்தி இருக்கிறதென்பதை. நாம் எளிதில் அறிதல் அசாத்தியம். ஆகையால் முற்று மறிந்த தாகப் பாவித்து வீண்வாதம் பேசியும் தருக்கியும் அலைதல் கூடாது.

லலிதாம்பிகை.

நீதிநடையைப் பாடசாலையிற் கற்பித்தல்.

உலகத்தில் பிறந்த ஒவ்வொருவனும் மானிடத்தன்மைக்குரிய நல்லொழுங்கங்களை அனுசரித்தலவசியம். ஒருவன் மற்றொருவனிடத்தில் நடந்து கொள்ளும் முறையை அறியாமலிருத்தல் புத்தியீனமே. ஆகவே சிறுவர்களின் கல்விப்பயிற்சிக்கு ஏற்பட்டிருக்கிற பாடசாலைகளில் நீதிநடையைக் கற்பித்தல் இன்றி அமையாதது. துக்கம் முதலிய இவ்வுலகத்திற்குரிய தீமைகள் இவ்விஷயத்தை அறியாமையினாலே உண்டாகின்றன.

இப்பொழுது சாதாரணமாக வித்தியா சாலைகளில் கற்பிக்கப்படுகிற பாடங்களை ஒரு வகுப்புப் பிள்ளைகளுக்கு ஒருவருடம் கற்பித்து அதே வகுப்பினோர்க்கு ஒருவருடம் நல்லொழுக்கங்களைக் கற்பித்து இவ்விரண்டுவிதக் கல்வியின் பிரயோஜனத்தையும் ஒத்துப்பார்க்கில், வித்தியாசந் தெரியும். இரண்டாவது கல்வி அதிகப்பயனைத் தருமென்பதற்குஐயமுண்டா? ஒருவன் இங்கிலீஷ் இரேசா கணிதம் (Geometry) அட்சர கணிதம் (Algebra) சரித்திரம், பூகோளம் முதலியவைகளைக் கற்பினும் மனுமுறையை அனுசரிக்காவிடில் அவன் மிலேச்சனே. அவன் படிப்பில்லாதவனிலும் கீழ்ப்பட்டவனாகிறான். ஏனெனில் இவ்விதப்படிப்பு ஒருவனது இயற்கை தருணத்தைப் பலப்படுத்துகிறது.

நல்லொழுக்கத்தைப் பாடசாலைகளில் கற்பிக்க நேரமில்லாவிடில் ஏனையபாடங்களைக் குறைத்து விடவேண்டும். பாடங்கள் அதிகமாக இருப்பினும் இம்முக்கிய விஷயத்தை அவசியம் கவனித்தல் வேண்டும். "நீதி நடையைக் கற்பித்தல் முடியாத காரிய"மென்பது சாதாரணமான வழக்கு. நீதிநடை நாகரீக அபிவிருத்திக்கு கடைக்காலாக விருக்கின்றது. ஆகவே இவ்வழக்கு வீண்

வழக்கே. இது மூடர் கொள்கை. ஆராய்ச்சியின்றி இதை நிஜமென்று நம்புகின்றவர்களும் மூடர்களே. அன்பு, பூததயை, தைரியம் முதலிய நல்லொழுக்கங்களை மற்றப் பாடங்களைப்போல் சுலபமாகக் கற்பிக்கலாம்.

ஆனால் ஏனைய பாடங்களைப்போல் எல்லாரும் இதைக் கைப் பற்றுவது முடியாது. ஏனென்றால் சில பேர்களிடம் நற்குணம் பிறவி முதலே குடிகொண்டிருக்கிறது. ஆகவே எவ்வளவு பிரயாசையும் அவர்களிடத்தில் பலியாது.

யோசித்துக் கூறுவோமானால், சிறுவர்களுக்கு எவ்விதப் புத்தியையும் புகட்டக்கூடும். உபயோகமற்றதாயும், பணச்செல வாயும் உள்ள விஷயங்களை உலகத்திலநேகர் வீணாக அறியக்கஷ் டப்படுகிறார்கள். நாகரீகத்திற்கு முக்கியமான நீதி நடையைக் கற்பித்தல் எவ்வளவு மேன்மையானது.

துன்மார்க்கத்திற்கும், கொரேத்திற்கும் இரண்டு காரணங் களிருக்கின்றன. மற்றொருவகுப்பு நிலைமையை அறியாம லிருத்தல் முதற்காரணம். நீதி நடைக்கு பச்சாதாபமே முக்கிய காரணம். பச்சாதாபம் மனதின் உணர்ச்சியாகின்றது. இவ்வித உணர்ச்சியை நல் வழியிலேயே கொண்டுவர முயற்சியில்லாமையி னாலே துர்க்குணங்கள் உண்டாகின்றன. நாமிதை போஷிப்ப தில்லை. இதன் மேல் நம் கவனத்தை நாம் செலுத்துவதில்லை. கதையினாலும், உதாரணத்தினாலும், சந்தர்ப்பத்தினாலும் இவ்வுண ர்ச்சியை செம்மையாக்குதல் முடியாத காரியமல்ல. மனிதர்க்கு ள்ள உணர்ச்சிகள் மிருகங்களுக்குள. அவைகளுக்கும் சந்தோஷ துக்கங்களுள. நாம் எப்படி நன்றாய் நடத்தப்பட இஷ்டப்படுகி றோமோ அப்படியே நாமும் பிற ஜீவன்களை நன்றாய் நடத் தல் வேண்டும். இவ்வெண்ணத்தை நாம் இளம் பிராயமுதற் கொண்டே கைப்பற்றவேண்டும்.

சங்கரன்.

கிராமப்பள்ளிக் கூடங்களில்

பிள்ளைகளுக்குப் படிக்கக் கற்பித்தல்.

அநேகம் தெருப்பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் தங்கள் புத்தியைச் சிறிதும் உபயோகிக்காமலே கிளியைப்போல் சொன்னதைச் சொல்ல மாத்திரம் பழக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரிந்த விஷயமே. சிறு குழைந்தைகளுக்குப் பதம் பதமாய்ச் சொல்லி அவர்கள் பின்னால் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இது மாத்திரமல்லாமல் இதற்குமேல் நாராயணசதகம்; அரப்பளீசுரசதகம் முதலானவைகளைப் படிக்கும் பிள்ளைகளைக் கூட அவர்களே படிக்க முயலும்படி விடாமல் உபாத்தியாயர் தான் முன்னால் ஒரு வரியை, "கோபமே பாவங்களுக்கெல்லாந் தாய் தந்தை" என்று படித்துப் பிற்பாடு பிள்ளைகளையும் தான் சொன்னவரையில் படிக்கும்படி செய்கிறார். இவைகள் செய்யுளானவை பற்றி ஒரு வேளை இராகம் சீர் முதலானவைகளுடன் படிக்கக்கற்றுக் கொடுக்கிறாரென்றே நினைப்போம். இச்சதகங்களுக்குப் பதத்துக்குப்பதம் அருத்தம் கொடுத்திருக்கிறது; அப்புத்தகங்களையும் அவற்றின் அருத்தத்தையுங் கூட உபாத்தியாயர் படித்துக் காண்பிக்கிறார்; அருத்தத்தின் முடிவில் 'எ-று' என்று அச்சடித்திருக்கும். அது 'என்றவாறு' என்பதின் சங்கேதம். அதையும் அவர்படித்துப் பிள்ளைகளைச் சொல்லச் செய்கிறார். புஸ்தகங்களைப் படிப்பதில் நேத்திரங்களை யுபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது; மேற்சொன்ன மாதிரி படிப்பிலோ, உபாத்தியாயர் சொன்னதைக் காதினால் கேட்டு உடனே பிள்ளைகளும் சொல்லுகிறார்கள். அப்பொழுது அவர்கள் எழுத்துக்களின் மீது கவனம்கொண்டு சிரத்தையுடன் படிப்பார்களா? புஸ்தகங்களை நமோஜூக்குக் கையில் பிடித்துக் கொண்டிருப்பார்களே தவிர அக்ஷரங்களின் தொடர்ச்சியைப் பற்றிச் சிறிதுங் கவனியார்கள்.

மேலும் அவ்வித பாடசாலைகளில் தடமாட்டமில்லாமல் அக்ஷரதாட்டியுடன் கூடிப்படித்தால் மாத்திரம் படிப்பினுலுண்டாகும் பிரயோஜனம் கிடைத்துவிட்டதாய் நினைக்கிறார்கள். பெற்றோர்களும் தங்கு தடையில்லாமல் படித்தால் தம் பிள்ளை கெட்டிக்காரனென்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக,

'முத்தைத்தரு பத்தித்திருநகை யத்திக்கிறை சத்திச்சரவண முத்திக்கொரு வித்துக்கொருபர னெனவோது' என்பது முதலிய ஏனைமோனை நிறைந்துள்ள செய்யுள்களடங்கிய 'திருப்புகழ்' என்னும் புஸ்தகத்தைப் படிக்கக் கற்றுக் கொண்டால் அவன் பிரபலவித்துவான் என்கிற அபிப்பிராயமும் சிலருக்குண்டு. தடையில்லாமல் படிப்பது தானு படிப்பின் கருத்து? ஒரு பொருளைப்பற்றி வாசித்தால் அதைப்பற்றிய அறிவு பிள்ளைகளுக்குண்டாகவேண்டும். வேறேதோ ஒரு விஷயத்தைப்பற்றி ஒரு புஸ்தகத்திலெழுதி யிருந்தால் அதை நன்றாய் வாசித்து அவ்விஷயத்தின் முக்கிய சாராம்சத்தை அறியவேண்டும். அவ்வித அறிவில்லாமல் குருட்டுப்பாடமாய் வாசித்துக்கொண்டு போவதில் என்ன பயன்? இம்மாதிரி குருட்டுப் பாடம் வாசிப்பதால் எத்தனை பிள்ளைகள் ஒரு பக்கத்தின் மூன்றும் வரியை வாசிக்கும்பொழுது எட்டாம் வரியில் விரலை நகர்த்திக்கொண்டு போகிறார்கள்? இந்த மாதிரி அவர்கள் செய்வது எதினுலென்றால், சென்னதைச் சொல்லி அக்ஷரத் தொடர்ச்சியின் மேல் கருத்தில்லாமையினுலும் தாங்கள் படிக்கும் விஷயத்தைப்பற்றிய ஞானம் சிறிதும் உண்டாகாமையினுலுமே.

ஒரு பொருளைப்பற்றிய அறிவு எப்படி யுண்டாகும்? அறிவைப் புகட்டக்கூடிய சாதனங்களைக் கடவுள் நமக்களித்திருக்கிறார். மெய், வாய், கண் மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் மூலமாய் நமக்கறிவுண்டாகிறது. இவ்விந்திரியங்களைச் சிறு பிள்ளைகள் செவ்வையாய் உபயோகிக்கும்படி செய்ய வேண்டியது

உபாத்தியாயரின் கடமை. திறமையற்றவனிடம் சிறந்த கருவிகளிருந்தென்னபயன்? அப்படி யல்லாமல், எந்த விஷயத்திற்கு எந்தப் புலனை உபயோகிக்க வேண்டுமோ அதை யறிந்து பல வழிகளாலும் சிறு குழந்தைகளுக் கறிவு புகட்ட முயலுவது உபாத்தியாயரைப் பொறுத்தது. உதாரணமாக ஓர் குழந்தைக்குக் கிச்சிலிப்பழத்தைப் பற்றிய ஞானம் வரவேண்டுமானால், அது உருட்சையாயும், மஞ்சளாயும், தித்திப்பாயு மிருக்குமென்று அக்குழந்தை ஆயிரந்தரம் படித்தாலாவது அலலது இதரர் சொல்லக்கேட்டாலாவது அப்பழத்தின் குணங்களை யெல்லாம் அறிந்துகொள்ளுமா? பிற்பாடு எப்பொழுதாவது கிச்சிலிப் பழத்தைக் காணும் பொழுது அதுதான் கிச்சிலிப் பழமென்று தெரிந்துகொள்ளுமா? அதற்காகக் கிச்சிலிப்பழத்தைப் பற்றிய பாடத்தைப் படிக்குமுன்னமே, அதைக் கொண்டுவந்து குழந்தைகளுக்குக் காண்பிக்க வேண்டும். அதைப் பார்த்த மாத்திரத்திலேயே ஸ்பரிசத்துக்கு இன்னமாதிரி யிருக்குமென்றும், பூராப் உருட்சியானது அல்லவென்றும் அறிவது அசாத்தியம். பழத்தைக் கையில் வாங்கி அவர்கள் முழுவதும் திருப்பித் திருப்பிப் பரிசோதித்தார்களானால், அது மிருதுவான தென்றும், பூராவாய் உருட்சியான தல்லவென்றும் அறிந்து கொள்ளுவார்கள். பழத்தைச் சாப்பிட்டால் அதன் ருசியைப்பற்றி ஞானம் உண்டாகும். இப்படி இந்திரியங்களின் மூலமாய்ப் பலவாறு சோதித்ததன்மேல் அதனுடைய அநேக குணங்களை அறிந்துகொள்ளுகிறார்கள். பிற்பாடு அதைப் பார்த்தாலாவது, அதைப்பற்றிக் கேட்டாலாவது அதனுடைய சகல குணங்களும் உடனே உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதுபோலவே எதைதைப் பற்றிப் படிக்கப் புகுந்தாலும், அப்பாடத்திற்குச் சம்பந்தமான பொருள்களையும், படங்களையும் உபயோகித்து, பிள்ளைகள் எவ்விஷயத்தைப்பற்றிப் படிக்கப்போகிறார்களோ அவ்விஷயத்தைப் பற்றி அவர்களுடன் சம்பாஷணை செய்யவேண்டியது. விஷயத்தைப்பற்றிய ஆவல் அவர்களுக்குண்டானல் படிப்பின் மீது அவர்களுக்குத் தானே

இஷ்டமுண்டாகிறது. ஸாராம்சத்தை முக்கியமாய்க் கோரியவர்களாதலின், நிறுத்தவேண்டிய இடங்களில் நிறுத்தி சேர்த்துப் படிக்கவேண்டிய இடங்களில் சேர்த்துப் படிப்பார்கள் அப்பொழுது அவர்கள் தாங்கள் அறிந்து கொள்வதுமன்றிக் கேட்பவரும் விஷயத்தை அறிந்துகொள்ளுமாறு ஊக்கத்துடன் படிப்பார்கள்.

படித்தபிறகு படித்த விஷயத்தைப்பற்றிச் சம்பாஷிப்பது மிக்க அவசியம். ஒரு புஸ்தகத்தைப் படிப்பதென்றால் என்ன? நேத்திரங்களின் உதவியால் விஷயங்களை அறிந்துகொள்வதே ஒரு புஸ்தகத்திலடங்கி யிருப்பதைப்பற்றிச் சம்பாஷிப்பதென்றால் அதிலுள்ள விஷயங்களைச் செவியின் மூலமாய் அறிந்துகொள்வது. அநேகம் சிறுவர்கள் (பெரியவர்களும்) தாங்கள் அதிக ஆவலுடன் படித்த விஷயத்தைப் பற்றிப் பிற்பாடு இதற்குச் சொல்லச் சக்தியற்றவர்களா யிருக்கிறார்களல்லவா? ஏதோ கொஞ்சந்தெரியும்; ஆனால் பாதி மறந்து விடுகிறார்கள். ஏனெனில் அவ்விஷயங்கள் ஒரு இந்திரியத்தின் மூலமாய்ச் சீக்கிரம் வந்து செவ்வையாய் மனதில் பதியவில்லை; அவைகளின் மூலமாயும் வந்தால் மனதில் திடமாய்ப் பதியும். புஸ்தகத்தைப் படித்து முடித்ததாகப் பேர்வைப்பது மிகவும் பிசகான காரியம். படிப்பு விவேகத்தை யொட்டியிருக்கும்படி மேற்கூறிய சாதனங்களை யெல்லாம் உபயோகப்படுத்திப் பாடத்திற்கு முன்னும், பின்னும் அதிலடங்கிய விஷயங்களைக் குறித்துச் சம்பாஷித்தால் படிப்பு வெகு சுலபமாய்விடும்.

கடைசியாய் நாம் படிப்பைப்பற்றிக் கூறுவது யாதெனில் விஷயத்தைக் கவனியாது அக்ஷரங்களை மாத்திரம் சேர்த்துப் படிப்பது படிப்பல்லவென்பதே யாம். சரளமாய்ப் படிக்கிறான், தடமாடிப் படிக்கிறானென்பதை மாத்திரம் நாம் படிப்பென்று கொள்ளுவது பெருந்தவறு. ஒன்றைப் படித்ததினால் மாணாக்கனுக்கு எவ்வளவு ஞானம் அதிகரித்ததென்பது தான் முக்கிய

மாய் நாம் கவனிக்கவேண்டியது. ஆனல் ஞானமிருந்தால் அக்ஷாதாட்டி வேண்டாமாவென்று கேட்கலாம். அக்ஷாதாட்டியானது அறிவைப் பொறுத்தது. பழக்கத்தினால அக்ஷாதாட்டி யுண்டாய் விடும். ஆனல் கவனமில்லாது எத்தனை தரம் வாசித்தபோதிலும் அறிவுண்டாகுமென்பது நிச்சயமில்லை. விஷயத்தின் மீது ஊக்கமில்லாமல் குருட்டுப்பாடம் படிப்பது உயிரில்லாத உடலைப்போலாம். மேற்சொன்ன தவறான எண்ணங்களைச் சீர்திருத்தி, சிறந்த அறிவை நம் தேசச் சிறுவர்களுக்குப் போதிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் கிராமாந்தரங்களில் இப்பொழுது 'எலிமெண்டரி பாடசாலைகளை' ஏற்படுத்தியிருக்கிறார்கள் அந்தக் கருத்தை முக்கியமாய்க் கொண்டு அப்பாடசாலை உபாத்தியாயர்களும் நடந்து வருகிறார்கள். ஆதலின், "எங்கள் ஆறுமுக வாத்தியாரால் வருஷத்துக்கு ஆறு புஸ்தகம் முடிப்பார்; நீர் முப்பது பக்கங்கூட முடிக்கவில்லையே" என்று நம் சிறுவர்களின் பெற்றோர்கள், நம் எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்களை நிர்ப்பந்தம் செய்யாமலிருப்பார்களென்று நம்புகிறேன். சு—மி

கங்காஸ்நானஞ் செய்யச்சென்ற அந்தணன்.

நாராயணபுரம் என்ற ஓர் ஊரில் சங்கரசுப்பய்யர் என்ற ஓர் அந்தண சிரேஷ்டர் இருந்தார். இவர் வேதாத்தியயனம் செய்தவர். ஒரு சமயம் காசி யாத்திரை செய்ய உத்தேசித்து, தமது வீட்டை விட்டுப் புறப்பட்டுக் கால்நடையாய்ச் சென்றார். போய்க் கொண்டிருக்கையில் வெயிலின் கொடுமையால் சங்கரசுப்பய்யருக்குத் தாகம் அதிகரித்தது. தாகசாந்தி செய்துகொள்வதன் பொருட்டு அங்கு வழியோரத்திலிருந்த ஓர் குளத்திலிறங்கி இருகரங்களாலும் தண்ணீர் கெண்டார். கரையின்மேலிருந்த நாவன் மரத்தின் மீதிருந்து ஓர் எச்சிற் கொட்டை அதில் விழுந்தது. சங்கரசுப்பய்யருக்குத் தாகத்தின் கொடுமை அதிகம். ஆதலால் அந்த ஜலத்தை அப்படியே பருகிவிட்டார் உடனே "இக்கொட்டை இங்கென்னமாய் வந்தது. பறவை, அம்மயேதேனும் போட்டதோ" வென்று உயர அண்ணாந்து அம்ம

ரத்தை உற்று நோக்கினர். அம்மரத்தில் ஒரு சிறு பையனிருக்கக்கண்டு நீ யார் என்று கேட்டார். ஐயா நான் இங்கு தண்ணியிறைக்கும் பறைப்பையன் என்றான். நீதான் இப்பொழுது பழந்தின்று கொட்டையை இங்குமிழ்ந்தாயோ வென்றார். அவன் ஆமாங்க. நாந்தானுங்கசாமி என்றான். இதைச் செவியுற்றதும் அந்தணன் மிகவும் வெறுப்பும் வருத்தமுமடைந்து "இந்தப் பறையனெச்சிலேத்தின்ற நான் எவ்வாறு மனிதனாவேன். அந்தோ! என் விதியா என்று முணு முணுத்துக்கொண்டே அருகேயிருந்த ஓர் ஊருக்குச்சென்று அவ்வூரிலிருந்த ஓர் சாஸ்திரியாருக்கு இதனைத் தெரிவித்தார். அவர் "நீர் ஏகவாரபோசனத்தோடு கங்கைக்குச்சென்று அங்கு ஸ்நானஞ்செயது வருவீராகில் இப்பாவம் தீரும்; பரிசுத்தனாவீர்" என்றார்.

இதைக்கேட்ட மறையோன் சாஸ்திரியார் விதித்த பிராயச்சித்தமும் நமது யாத்திரைக் கனுகூலமாகவே ஏற்பட்டது, என்று சந்தோஷித்து அங்கிருந்து புறப்பட்டு ஒரு வாரங்கழிந்தபின் ஓர் கிராமத்திற்குச்சென்று அங்கிருந்த ஓர் விப்பிரன் வீட்டுவாசல்திண்ணையில்படுத்திருந்தார். இவர்ஏகவாரபோசனத்தோடிருப்பதால் இவருக்குத் தூக்கம் செம்மையாய் வரவில்லை. அப்போது இவர் படுபபதும் எழுந்திருப்பதுமாக விருந்து அங்கிருந்த ஓர் மாடத்திற் கையிட்டார். அதில் ஓர் பாக்கு இருந்தது, அதனை யெடுத்து வாயிற் போட்டுக்கொண்டு சற்றுநேரம் குதப்பி நறுக்கென்று கடித்தார். இவ்வோசையைக்கேட்ட அவ்வீட்டுப் பார்ப்பினி கதவைப் படேலென்று திறந்துகொண்டு வெளியே வந்து "இப்பொழுது இங்கு படுக்கென்று ஓசைபட்டதே; அது என்ன" என்றாள். சங்கர சுப்பையயர் "அம்மா! ஒன்றுமில்லை. இம்மாடத்தில் ஓர் பாக்கு இருந்தது. அதை வாயிற் போட்டுக் கடித்தேன். அது அப்படி யோசைப்பட்டதென்றார். அந்தப் பார்ப்பினி உடனே தன் முகத்தை ஒருதரம் குலுக்கி, "என்னே ஆச்சரியமிது! உம்முடைய பல்லின் உரமே உரம்!

(வரும்)

(முத்தம்மாள்.)

வர்த்தமானம்.

டெல்லியில் ஒரு விநோதத்திருட்டு,

டெல்லியிலே சிறிது காலமாக சில கொள்ளைக்காரர்கள் யமுனை யாற்றில் மூழ்கி ஒளித்துக்கொண்டிருந்து அவ்வாற்றில் நகைகளணிந்து கொண்டு குளிக்கவரும் ஆண்களையும் பெண்களையும் தண்ணீர்க்குள்ளே யிழுத்துக்கொண்டுபோய் வந்தார்களாம். ஒரு மாதத்துக்கு முன்னே அவ் வாற்றுககுக் குளிக்கச்சென்ற ஆண் பெண்பலர் இன்னும் அகப்பட்டபா டில்லையாம். சிலதினங்களுக்கு முன்னே பணம் பெருத்த பல நகைகளை போட்டுக்கொண்டு அந்த ஆற்றுக்குக் குளிக்கச்சென்ற ஒரு மார்வாரி ஸ்திரீயை தண்ணீர்க் குள்ளிருத்துகொண்டு யாரோ ஒருவன் காலைப்பிடி த்து இழுத்தானும். அந்த ஸ்திரீ உடனே என் காலைப்பிடித்து யாரோ இழுக்கிறனே என்று கூச்சலிட பக்கத்திருந்ததர்வர்கள் அவளைப் பிடித்து இந்தப்பக்கம் இழுத்தார்கள், அந்நிமிஷமே தண்ணீர்க்குள் யாரேனும் இருக்கிறார்களாவென்று இறங்கிச் சோதித்ததில் ஒரு மகமதியன் அகப் பட்டான். அவனை அரேஸ்ட்செய்து வைத்திருக்கிறார்கள்

கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாய் ஐக்கிய மாகாணப்பொருட் காட்சி.—கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாய் ஐக்கியமாகாணப் பொ ருட்காட்சியால் விளைந்த உபயோகமும் கண்டறிந்து கொள்ளப்பட்ட படிப்பினையும் இன்னவையாகு மென்று உருதுவிலாவது ஹிந்துஸ்தானி யிலாவது ஒரு வியாஸரூபமாய் தெளிவாய் எடுத்து எழுதுவோருக்கு ஐக் கிய மாகாணங்களைச்சேர்ந்த ராணி சரத் கன்வார் ரூபா 500-வெகுமதி கொடுப்பதாகச் சொல்லி யிருந்தார்கள். அந்த வெகுமதி இப்போது **ஸ்ரீமதி குமாரி தேவி** யென்ற லக்ஷ்மௌ பண்டிதரின் மனைவியாருக்குக் கொடுக்கப்பட்டதாய்த் தெரிகிறது. அந்தப் பண்டிதருக்கு மார்க்கண்டேய பிரசாத் பாட்டாஜார்ஜி யென்று பேராம்

ஒரு சிறந்த நன் கொடை —ஆமதாபத்தில் ஐரோப்பிய ஸ்திரீகளும் பார்ஸி ஸ்திரீகளும் பிரசவித்தற் பொருட்டுக் கட்டியுள்ள பிரசவ ஆஸ்பத் திரிக்குச் சகலஜாதி ஸ்திரீகளுக்கும் பொதுவாக ஒரு கட்டடங்கட்ட ஆன ரபில் கான்பகதூர் நௌரோஜி என்னும் ஒரு பார்ஸீ கனவான் 40000 ரூபாய் நன்கொடை யளித்திருக்கின்றார். இது மிகவு முத்தமமான நன் கொடையாம்.

முடிசூட்டு வைபவம்.

இம்மாதம் 22-ந்தேதி இங்கிலாந்தில் நமது சக்ரவர்த்திக்கு முடிசூட்டு வைபவம் நடைபெறும் அப்பொழுது அங்குள்ள ஆபீசுகளுக்கு மூன்றுநாள் விடுமுறை விடப்படுமாம். அநேக ஊர்வலங்களும் குதிரைப்பட்டாள வரிசைகளும் விடப்படுமாம் முடிசூட்டுவைபத்திற்காக லண்டன் நகரமுழு தும் வெகு வைபவமாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறதாம். வியாழன் வெள்ளி இரண்டு நாளும் ஊர்வலம் நடத்தப்படுமாம்.

நாம் இந்த விஷயத்தைக் குறித்து 20 ந்தேதியே பிரஸுக்கு எழுதிக் கொடுக்க நேர்ந்தமையால் முழுவிவரமும் எழுதமுடியாமல் போய்விட்டது அடுத்தமாதம் முழுவிவரமும் செவ்வனே வெளியிடுவோம்.

நமது சக்ரவர்த்தியாரின் அறிக்கை.—நமது சக்கிரவர்த்தியாரவகள் லண்டனில் முடிசூட்டு வைபவம் நிகழும்போது தமக்கும் தமது ராணியார்க்கும் தனித் தனியாக வந்தனோபசாரபத்திர மெழுதிச்சமர்ப்பித்தல் கூடாதென்றும், அப்பத்திரத்தை விலையுயர்ந்த சிமிழ்களில் அடக்கஞ் செய்தல் கூடாதென்றும், ஷை சிமிழ்க்காக உபயோகப்படுத்தும் பெரும் பணத்தைத்தரும விஷயமாகச் செலவுசெய்தால் தமக்கும் தமது ராணியார்க்கும் சம்மதமா யிருக்குமென்று மறிவித்திருக்கின்றார்.

த்ருநெல்வேலி கலெக்டா மிஸ்டர் ஆஷ் சுட்டுக்கோல்லப்பட்டார்.

மிஸ்டர் ஆஷ்தமது மனைவியுடன் முதல் வகுப்பில் வண்டியில் மணியாச்சி ஸ்டேஷனில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவரை ஓர் அந்தணன் சுட்டானென்றுங்கேட்டு விசனிக்கின்றோம்- சுட்டபாதகன் அப்பொழுதே ஓடி அந்த ஸ்டேஷன் கக்கூஸில் ஒளிந்துகொண்டு தன்னைச் சுட்டுக்கொண்டு இறந்துவிட்டானும். அவனுக்கு வயது 30-இருக்குமென்று சொல்லப்படுகிறது. கலக்டரவர்களுக்கு அங்கிருந்து கங்கைகொண்டான் ஸ்டேஷன் போகும்வரையில் உயிர் இருந்ததாகவும் தெரிகிறது. அவர் இறக்குந்தருணத்தில் தமது மனைவியின்பேரில் தலைவைத்துச் சாய்ந்துகொண்டிருந்தனராம், அந்தோ! பரிதாபம்

மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி யிருக்கும் பிராமண ஸ்திரீகள்.

இந்த வருஷத்து மெட்ரிகுலேஷன் பரீட்சையில் P. ருக்மணி அம்மாள், H. ருக்மணி யம்மாள், இந்த இரண்டு பிராமண ஸ்திரீகளும் தேறியிருக்கிறார்களென்று தெரிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம். இந்தஇரண்டு ஸ்திரீகளும் உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். P. ருக்மணி யம்மாள் திருவனந்தபுரம் திவான் பகதூர் P. கோபாலாசாரியாரின் குமாரர் மிஸ்டர் P. வரதாச்சாரியின் சம்சாரம். இம்மாது எழும்பூர் பெண்கள் போதனுமுறைப்பாடசாலையில் படித்து பரீட்சைக்குச் சென்று இரண்டாவது வகுப்பில் தேறியிருக்கிறாள். H. ருக்மணியம்மாள் காலஞ்சென்றுவிட்ட ராஜா ராமராவின் பேத்தி இவள் மூன்றாவது வகுப்பில் தேறியிருக்கிறாள். இவர்களிருவரும் யூனிவர் லிடி இண்டர் மீடியேட் பரீட்சைக்கு வாசிப்பார்களென்றே நம்புகிறோம்.

பிரான்ஸில் ஜனனக் குறைவு.

1887-ம வருஷம் முதல் நாளது வரையில் பிரான்ஸில் ஜனனம் குறைந்து கொண்டே வருகின்றது. 1910-ம் வருஷக் கணக்கில் மரணத்தை விட ஜனனம் 70581 தான் அதிகம். 1859-ம் வருஷம் ஜனனம் 1018000 இது எறத்தாழ 1887-ம் வருஷம் வரைலல் இருந்து வந்தது அந்த வருஷம 984000 ஜனனமே ஆயிற்று: இதற்குப்பிறகு. இருபது வருஷமாக ஜனனம் 90 000க்கு மேலாக இருந்து வந்தது ஆனல் 1887-ம் வருஷம் 899000 ஜனனமாகக் குறைந்து விட்டது. 1906-ம் வருஷம் முதல் ஜனனம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவந்து 8,00000 த்துக்கும் கீழேபோயிற்று- 1910-ம் வருஷத்திலோ 7,03,774 ஜனனம்தான் ஆயின, இதே காலத்தில் ஜர்மனியில் உண்டான ஜனனத்தைப் பார்ப்போமானல் 8,84,061 ஆயின. அதாவது பிரான்ஸைவிட 10 மடங்குக்கு மேலாயிற்று.

போவிருந்த கட்டடங்களும்மிகவும் உன்னதமாகவும்பார்ப்போர் மனதைக்கவரும்படியாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. எங்கே பார்த்தாலும் பாதாகைகள் பறந்தன. அங்கங்கே அநேகவிசித்தி மானரவஜோவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

சக்ரவர்த்தினியின் சிம்மாசனமானது ஆலயத்தின் பீடத்திற்குச் சமீபமாய்ப் போடப்பட்டிருந்தது. அதன்மேல் ஒரு தங்கக் கிரீடம்வைக்கப் பட்டிருந்தது. எல்லாரும் அவரவர்களுக்குக்குரிய இடங்களிலிருந்து தோத்திரப்பாடல்களைச் சொன்னார்கள்.

முதல் ஊர்வலத்தில் இளவரசர்களும் சமரதிகளும் வந்தார்கள். இரண்டாவது ஊர்வலத்தில் இராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும் சென்றார்கள். கடைசியில் வேல்ஸ் இளவரசர் பிரின்ஸஸ் மேரி பிரின்ஸ் ஆல்பர்ட் பிரின்ஸ் ஜியார்ஜ் முதலானவர்கள் சென்றனர்.

கடைசியாகச் சக்ரவர்த்தியின் ஊர்வலக்காட்சி நடந்தது. அதில் முதல் வண்டியில் சக்ரவர்த்தியின் உறவினர்கள் சென்றார்கள். பிறகு சக்ரவர்த்தியின் கடற்படைப் தரைப்படைப்பிரதிநிதிகள் சென்றனர்.

பிறகு சக்ரவர்த்தியின்எட்டுக்குதிரைகள் பூட்டப்பட்டவண்டி மிகுந்த அலங்காரத்துடன் வந்தது. இப்போது இடைவிடாதுகர கோஷமும் வாத்திய கோஷமுமுண்டாயின. சக்ரவர்த்தியும்சக்ரவர்த்தினியும் இருமருங்கும் கூட்டமாயிருந்த ஜனங்களைப்புன்சிரிப்புடன் பார்த்தவண்ணத்திலேயே தலையையசைத்துக்கொண்டு சென்றார்கள். சக்ரவர்த்தினியின் வண்டிக்குப்பிறகு அநேக பிரபுக்களின் வண்டிகள் சென்றன.

ஜியார்ஜ்சக்ரவர்த்தியார் இவ்விதக்கோலாகலத்துடன் வெஸ்ட்மினிஸ்டரபீக்குள்பிரவேசித்ததும்எங்குகண்டாலும்“அரசனைக் கடவுள் காக்கட்டும்” என்றசத்தமுண்டானதுமன்றி மணிகளின் முழக்கமும் வாத்திய கோஷமும் இடைவிடாமல் முழங்கின. சக்ர

வர்த்தியார் சிங்காதனத்தமர்ந்ததும் ஆர்க்கிபிஷப் வந்து வைதிகச் சடங்கை முடித்துமகுடத்தைச்சக்வரர்த்தியவர்களின்சிரமீதுசூட்டினார். வேல்ஸ் இளவரசர் கிரீடத்தைக் கையால் தொட்டுக்கொடுத்தார். அன்றியும்சக்ரவர்த்தியாருக்குஓர்முத்தியீந்து மகிழ்ந்தனர்.

இவ்விதம் சக்ரவர்த்தியார் முடி சூட்டிக்கொண்டு அங்கு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்து பிறகு முடி தரித்தபடியே பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் சென்றனர்.

நமது சக்ரவர்த்தியார் தமது ஆன்றோர்களை அனுசரித்து தமது பிரஜைகளின்மீது ஈன்றதாயினும் இனிய கருணை காட்டிக் குறை களைந்து தமது ராஜரீகம் என்றும் குன்றாத புகழோடு விளங்குவதற் கேற்றபடி தெய்வகிருபை பெருக வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றனம்.

ஈசுவர சிருஷ்டியில் வெளவால்களின் பிரயோஜனம்.

(செந்தமிழ்)

அசங்கியமான துர்நாற்றத்தின் பொருட்டும், சந்தடியின் பொருட்டும் பல்லோராலும் பெரிதும் விருப்பப்படா தருவருக்கப்படுகின்ற வெளவால், நம் மிந்தியநாட்டில் இந்து தேவாலயங்களில் இருளடர்ந்த கோபுரச் சந்துகளிலும் கோயிலுட்பிராகாரங்களிலுமுள்ள உயர்வானமனிதரால் சுலபசாத்தியத்தில் எட்டித்தாவ முடியாத மண்டபச்சுவர்களின் மூலைகளிலும் யோகியர் போல் பகல் முழுவதும் தலைகீழாய்த் தூங்கிக் கொண்டிருந்து இராத்திரிவேளைகளில் தம்மிரையின் பொருட்டு வெளிப்பட்டுலா

வும் சுபாவமுடையது. மிருகங்களைப்போற் குட்டிபோட்டுப் பால் கொடுத்துப் போஷிப்பதனாலும், பறவைகள்போல் இறகுகளை யுடையனவாய்ப் பறப்பதனாலும் இவ் விரினங்களிற்கும் இடை யினமாகவே இச்சாதாரண வௌவாலைச் சேர்த்திருக்கிறார்கள். இத்தகைய வௌவால்கள் மனிதர்களின் வீடுகளிலும் வசித்து வீடுகளை ஆபாசப்படுத்தியும் தொந்தரவுவிளைவிப்பதனால் மனிதர் கள் இப்பிராணிகளை ஒருக்கால் வெறுப்பார்களாயினும் அன்ன வர்களே இவைகளின் உபயோகங்களை யறிந்தால் அங்ஙனம் செய் யார்கள் என்பது திண்ணம். இவ்வீட்டு வௌவாலகளைத் தவிர்த்து முரட்டுச் சுபாவமுள்ள பெருத்தமிவௌவால்களும் பல நாட்டி லுள்ள அடர்ந்த தோப்புகளில் மனித சஞ்சாரமில்லாத விடங் களில் ஏராளமாய் வசிக்கின்றன. இவ்வௌவால்கள் பழந்தின்னி வௌவால்கள் என்றே பெயரிட்டழைக்கப் படுகின்றன. "மரம் பழுத்தால் வௌவாலை வாவென்றுகூவி இரந்தியழைப்பார் யாவ ருமிங்கில்லை" என்னும ஔவையார் வாக்கிற்கிணங்க இவ்வௌ வால்களுக்கு எந்த மூலையின் எவ்வளவு விஸ்தாரமான தூரத்தில் பழங்கள் பழுத்தாலும் சொல்லாமலே மோப்பத்தினால் அறிந்து கொள்ளும் படியான சக்தியுள்ளது. தம்கண்களை இறுகமூடிக் கொண்டாலும், அவை தம் காதையும் மூக்கையும் நெறுக்துப் பிடித்துத் தொலைதூரத்திலுள்ள பழவர்க்கங்களின் வாசனையை மோப்பம் பிடித்து ஆங்குஇரவுகளில் கூட்டங் கூட்டமாய் விரைந் துசென்று மனங்கொண்ட மட்டும் அவற்றையுண்டு மீண்டும் தம் மிருப்பிடம் வந்து சேர்கின்றன. பழுத்திருக்கப்பட்ட இலுப்பை ஆல், அரசு, அத்தி, மாதுளை, முதலான மரங்களிலுள்ள கனிகளை வயிறு நிறையத்தின்று வழியே பறந்துவரும்போதே அவ்வி ரையை வாயினாலேயே கக்கிப்பலவிடங்களிலும் எச்சமிடுகின்றன. இவ்வாறு எச்சமிட்ட பலவிடங்களில் பழந்தரு மரங்கள் அநந்தம் உண்டாகி அவ்வவ் விடங்களைச்செவ்விய காட்சிதந்து அலங்கரிப் பதுடனில்லாது மனிதர் எல்லோரும் அவைகளால் அடை யும் பலனோ சொல்லிலடங்காது. இப்படி இவ்வௌவால் வர்க்

கத்தின் அவ்வெச்ச வுரத்தின் சிறப்பு மிகுதியுங்கொண்ட பழம ரங்கள், முளைக்கக்கூடாத விடங்களிலும் எதிர்பாராமல் இயல் பாய் முளைத்துப் பலன் தருகின்றன. இவ்வௌவால்கள் இங் ஙனம் பழந்தின்று ஊரத்தின் பெருமைகலந்த எச்சத்தைக் கண் ணுக்கெட்டாத தூரததிலுள்ள விளை நிலங்களில் உபயோகிப்ப துடன் நில்லாது, பயிர் பச்சைகளில் வந்து மேய்ந்து, அவற்றை யடியுடனழிக்கிற பூச்சி, புழுக்களைத் தின்றும் குடியானவர்களுக் குப் பெருத்த உபகாரம் செய்வனவாகின்றன.

வௌவால்கள் பழந்தருமரங்கள் உண்டாவதற்குக் காரண மாவதுபோல் காக்கைகளும், பூமியிலுள்ள அநேகவித அபூர்வ விருக்ஷ வகைகளுக்கும் மூலகாரணமாகின்றன. ஜாவாத்தீவில் முதன் முதலில் விளைந்ததும், மனுஷரி னுபயோகத்திற் கடுத்த தாயுமிருந்த இலவங்கப்பட்டையின் விதைகளை அக்காலத்திய டச்சு இராஜாங்கத்தாரின் அனுமதியின்பேரில் சிங்களத்தீவில் அவற்றின் விதைகளைக்கொண்டு விதைத்துத் தகுந்த பந்தோபஸ்த் துடன் ஆங்குப்பயிரிட்டார்கள். தகுந்தபந்தோபஸ்துடனேபாது காக்கப்பட்ட இப்பாகங்களில் அநுபவ பூர்வமாய்த் தெரியவரு கிறது தென்னிந்தியாப் பொட்டல் வெளிகளில் (Drylands) முக் கியமாய்த் திருநெல்வேலியிலும் மதுரையிலும் ஆடுகளும் மாடு களும் ஏராளமாய் மந்தைமந்தையாய் வளர்க்கப்படும் காலையில் அவை மேய்க்கப்படுவதற்காக நாடுகள் தோறும் ஓட்டிக்கொண்டு போகும்போது அவை கருவேலமரத்தின் காய்களை வயிறு நிறைய மேய்ந்து தாம் திரும்பித் தங்குமிடங்களில் சாணியுடன் அக்கருவேல் விதைகளை யிடுவதனால் அநேககருவேலங்காடுகள் உண்டாகி, அவைகள் குடியானவர்களின் கலப்பைக் கால்களுக் கென்றும் எத்தனையோ காரியங்களுக்கென்றும் பெரிதும உப யோகப்படுகின்றன. மேலும் அவைஉயர்ந்ததினுச்விறகாக அடுப் பெரிக்கவும் காளவாய்களுக்கும் ஏராளமாய் பிரயோஜனப்படு வதும் எங்கும் நன்கறிந்த விஷயம். ஆலும் வேலும் பல்லுக்கு

றுதி என்னும் பழமொழியின் வண்ணம் வைத்திய சாஸ்திர ரீதியிலும் மிகுதியும் பிரயோசனப்படுகிற இம்மரங்களுக்கு காரணம் ஆடு மாடுகளே என்றதினால் மிருகங்களும் எல்லாம் வல்ல ஈசனருளினால் மனிதரின் சௌகரியார்த்தம் வெகு தீர்க்காலோசனையுடன் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதெனச் சொல்லலும் தக்கதேயாம். தோல் பதனிடு தொழிலுக்கும் ஆடுமாடுகளின் ஆகாரார்த்தமாகவும் பெரிதும் பயன்படுகிற கருவேலமரங்களின் பெருமையும் எழுத எழுத விரியுமாதலின் இப்போது இதைப்பற்றி இம்மட்டோடு நிறுத்தினோம்.

வெளவால்கள் என்னும் பிராணிகள் கடிக்காத பழங்களில்லையாயினும் இவைகள் மனிதருக்குப்பல அரியபெரிய கைத்தொழில் வேலையில் கைக்குமெய்யாய்ப் பலன்றரக் கூடியதாயிருக்கின்றதென்பதற்குத் திருஷ்டாந்தங்கள் பலவுள. தென்னிந்தியாவிலுள்ள இலுப்பை மரங்களில்லாத பல விடங்களிலும் இவ்வெளவால்களின் உதவியினால் மாந்தர்இலுப்பைஎண்ணெய் ஏராளமாய் ஆட்டியெடுத்து இலாபம் சம்பாதிக்கிறார்கள். தஞ்சைஜில்லாவில் பேரளம் காரைக்கால் இருப்புப்பாதையில் பேரளத்திற்குக்கிழக்கே ஒரு மைல் தூரத்திலுள்ள புரசக்குடியில் ஓராலமரத்தின் கீழ் வருஷவாரியில் நாலைந்து ஆடத்திற்குக் காணும்படியான இலுப்பைக்கொட்டைகள் தினந்தோறும் பொருக்கி எடுத்துச் சேர்த்து ஆட்டி எண்ணெய் யெடுக்கும்படியாய்க் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றதெனப்படுகிறது. தஞ்சைஜில்லாவில் திருவாவடுதுறையாதீனத்து இலட்சத்தோப்பிற்கு அருகாமையிலுள்ள ஒருமூங்கிற்றோப்பில் ஏராளமாகக்குடிகொண்டிருக்கும்பழந்தின்னிவௌவாலின் எச்சத்தைக்கொண்டு வருஷவாரியில் எத்தனையோ கணக்கில்லாத ரூபா வரும்படியுள்ள இலுப்பைக்கொட்டைகள் சேகரிக்கப்பட்டுஎண்ணெய் ஆட்டப்படுவதென்றால்இவ்வெளவால்கள் நாட்டில்மனிதரால் நாசமாக்கப் படாது காப்பாற்றப்படல் வேண்டிய தவசியமாகின்றதல்லவா? இவைபோன்ற இலாபகரமான எத்தனையோ கைத்தொழில்களுக்கும் இவ்வெளவால் புழுக்கைகள்

கோயில்களிலும் பிறவிடங்களிலு மிருப்பன மிகுதியாயும் சாதுள்ளதாகையால் இவற்றை ஆங்காங்கு சேகரித்துக் குடியானவர்கள் எருவாக உபயோகித்துப் பலன் பெறுவதைவிட்டு, அலட்சியம் செய்வது அவ்வளவு நன்றாயிராது. இவைகள் உயர்ந்த புஷ்பச் செடிகளுக்கும், பலன் தரு விருக்ஷங்களுக்கும், மிக்க உரத்தைக் கொடுப்பதாய ரசாயன முறையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நாம் அநுபவத்தில் பார்க்கிறோம். இதன் புழுக்கைகளிலேயே இந்துக்களாலும், மகம்மதியர்களாலும், ஆங்கிலேயர்களாலும் முறையே காரஞ் சேர்ந்த துவையல்களாகவும் கிச்சிலிச்சோற்றின் சேர்ப்பாகவும், பெப்பர் மிண்டு (Pepper-mint-mixture) மிக்ஸ்ச்சராக ஔஷதசாலையி லுபயோகிக்கப்படுகிறதற்காகவும் பிரயோசனப்படுகிற விசேஷப்பயிர் எங்ஙனம் பலவிடங்களிலும் பரவிற்றென்று விசாரித்ததில், அபூர்வமான இச் செடிகளின் மீது தம்மாகரார்த்தமாக உட்காரும் காக்கைகள், அவற்றை ஏராளமாய்த் தின்று கண்ட கண்ட விடங்களிலும் தம்மலங்களை அவ்வுரத்தின் பலங்கொண்ட அவ்விலவங்கப்பட்டைச் செடிகள் ஏராளமாய் எங்கு முண்டாயினவென்று தெரியவந்தது. இம்மாதிரியான விருக்ஷம், செடி, கொடி வகையறுக்களை இப்பட்சிக் கூட்டங்களொன்றே எங்கு முண்டாகச் செய்து மனித சமூகத்திற்குபயோகமாயிருக்கின்றதென்று கருதவேண்டாம். இம்மாதிரியான வேலைகளை மிருகங்களும் நாளாவர்த்தியில் செய்து குடியானவர்களுக்குப் பெருத்த உபயோக மாயிருப்பதென்பதற்கு, தென்னிந்தியாவில் சிலபொதிஞ இலை (செடி) உண்டாவதாகப் பெரிதும் கூறுகிறார்கள். இவ்வௌவால்கள் அநேகம் அபூர்வமான பழங்களைத்தின்று உஜ்ஜீவித்தலினிமித்தம் பல பிரபல வைத்தியர்களாலும் தன் புழுக்கைபல அபூர்வமானமருந்து சரக்குகளிலும் சேர்த்துபயோகிப்பதும் பார்த்திருக்கிறோம். பண்டைக்காலந்தொட்டுத் தென்னிந்தியாவின் சில பாகங்களில் இப்பழந்தின்னி வௌவாலினின்றும் இரத்தம் எடுத்து இரத்தத்தின் ஒரு

பாகத்திற்குமேல் நான்குபாகம் நல்லெண்ணெய் கலக்கிப்பக்குவமாய் அவை ஒன்று சேரும்படி காய்ச்சி, பலநாள் காறும் இருந்த வழுக்கைத்த தலைகளுக்கும் நரைத்தலைகளுக்கும், சிரங்கு சொறி பிடித்த தலைகளுக்கும் தடவியதினால், மண்டைக் கொதிப்புகள் பெரிதும் நீங்கிக் குளிர்ச்சியுண்டாகி, அநேக வழுக்கைத் தலைகளும் எதிர்பாராமல் சடைத்த மயிருடைவைகளாய் மாறினவென்றால்; மனுஷசமூகத்தில் இக்கைத் தொழில் எத்துணைப் பலன் தந்துவந்தது அக்காலத்தில் என்றறிய விடந்தருகின்றது.

நம் சென்னைராஜதானியில் நெடுநாளாகச் செய்யப்பட்டு வந்த இவ்வபூர்வ கைத்தொழில் இப்போது அதனை ஆதரிப்பாரின்மையாலும், வேறு நாட்டிலிருந்து நரைவழுக்கைத் தலைகளுக்கு இந்தியா நாட்டில் இறக்கு மதியாகும் அநேகவிதமான நவநவமான எண்ணெய்களாலும், நமது தேசத்திய சுவதேசிய வெள்வால் மயிரெண்ணெயின் கிராக்கி குறைந்து. இக்கைத்தொழிலை இருந்தவிடம் தெரியாது மறைந்தேபோய் விட்டது. இப்பேர்ப்பட்ட ஆதிகாலத்திய கைத்தொழிலினால் நிதர்சனமாய் எவ்வளவோ நன்மையை படைய ஏதுவிருக்கின்றதென்பது இங்கு விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லவேண்டுவதின்று.

வட இந்தியா நாட்டில் மரத்தினால் எவ்வளவோ அபூர்வமான நவ்நாகரீகமுள்ள பிம்பங்களும் பிரதிமைகளும், பின்னும் நம்மிந்தியா நாட்டில் அத்தியாச்சரியமான பலவித கைத்தொழில்களும் செய்யப்பட்டு வந்தன. அவைகளை ஆதரிப்பாரின்மையால், அந்தோ! அவை உருத்தெரியாமல் மறைந்தே போயினபோல் இச்சிறந்த வௌவால் எண்ணெய் எடுக்கும் கைத்தொழிலும், ஆதரிப்பாரின்றிக் கைவிடப்பட்டது. நம்நாட்டிற்கு நேரிட்டிருக்கும் பிரதிகூலங்களிலொன்றாகும் என்பதற்கையமேயின்று.

இரசமுள்ள இந்தப்பழந்தின்னி வௌவால்களின் மாமிசமும் அதன் ஔஷதபகிமையின் பொருட்டும் அதன் மாதிரிபத்தின்

பொருட்டும் மாந்தரால் உட்கொள்ளப்பட்டுவந்தன. அந்நிய தேசங்களிலிருந்து இறக்குமதியாகிப் பிரபலமான ஔஷதமாக உபயோகப்படுத்தப்படுகிற காட்லிவர் (Codliver oil and maltine) ஆயில் மால்டீன் முதலியமருந்துகள் தேகத்திற்கு செய்யும் சௌகரியத்திற்கு மேலான சௌக்கியத்தையளிக்கக்கூடிய இவ்வௌவால்களின் மாமிசத்தின் அருமை, தற்காலத்தவர் பலருக்கும் நன்கு தெரியாமையும், தௌர்ப்பார்க்கியமுமேயாம். இப்பேர்ப்பட்ட அருமையான பழந்தின்னி வௌவால் கூட்டமாய்ச்சேர்ந்து! பழத்தோப்புகளைக் கொள்ளை கொண்டாலும் அவற்றின் உபயோகம் மனிதர்க்குப் பெரிதும் உற்றதாயிருக்கிறபடியாலும் பழத்தோப்பைக் கடித்துக் காட்டும் தூதனாயிருப்பதனாலும் இவற்றின் மகிமைகளை மானுடர் போற்றல் தக்கதேயாம்,

இப்பழந்தின்னி அம்சத்தைச் சேராத வேறு வர்க்கங்களுள் வாம்பையர் (Vampire) என்றதோர் இராட்சதாம்ச வௌவால் பல வேளைகளிலும் மிருகங்கள் போன்ற பிராணிகளுடைய இரத்தத்தையும் மனிதர்களுடைய இரத்தத்தையும் அவர்களுறங்கும் போது, தன்னுடைய விசாலமான விசிறிபோன்ற இறகுகளை யாட்டியாட்டி நன்றாகத் தூங்குவித்து, அவர்களறியாது அவர்தேகத்திலுள்ள இரத்தத்தைநன்றாகஉறிஞ்சி அவர்களுடைய ஆயுளைக்குறைப்பது பற்றி, அத்தகைய வௌவால்கள் நாடுமாட்களில் பிரபலித்து வளருவதை எவரும் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்பதும் திண்ணம்.

பத்மினி.

தைரியமும், நறகுணமும், பொருந்தி மிக்க அழகு வாய்ந்தவளாயிருந்த பத்மினியின் சரித்திரத்தை அநேகர் பல தடவை கேள்விப்பட்டிருக்கலாம். ஆயினும் இன்னெரு முறை இவ்வாச்சரிய சரிதையையெழுதுதல் குற்றமல்ல.

ரஜ புதனத்தினுள்ள சித்தூருக்குத் தலைவனுகிய பீம்சியின் மனைவிதான் பாதிசிரோமணியாகிய பத்மினி. டில்லியில் சுல்தானுயிருந்த அலாவுதீன் (Alauddin) அவள் மிக்க அழகு வாய்ந்தவளென்று கேள்விப்பட்டுக் கூடுமானல் அவளைத் தன் மனைவியாகக்கொள்ளத் தீர்மானித்தான். இவ்வெண்ணத்தை நிறைவேற்ற அவன் சித்தூரை யாதொரு பிரயோசனமுமின்றி முற்றுகை செய்தான். கடைசியில் சக்தியினுல் வெல்லக்கூடாததைத் தந்திரத்தினுல் கொள்ளத் தீர்மானித்தான். பெயர் பெற்ற பத்மினியின் முகத்தின் சாயலை ஒருதரம் பார்க்க அனுமதி அளித்தால் சித்தூர் முற்றுகையை நிறுத்திவிடுவதாக அலாவுதீன் அறிவித்தனன்.

கண்ணுடியில் பத்மினியின் வதன பிரதிபிம்பத்தைப் பார்க்க அனுமதிதருவதாக பீம்சி அலாவுதீனுக்குச் செய்தி அனுப்பினன். தைரியமும், தந்திரமுமுள்ள சுல்தான் அதற்குச் சம்மதித்துசிறுகாப்புடன் சித்தூரில் பிரவேசித்தான். அவன் அதிகௌரவத்துடன் அரசன் மனைக்குள் நடத்தப்பட்டான். அங்கேபிரகாசமான பத்மினியின் வதனத்தின் பிரதிபிம்பத்தை சுல்தான் பார்த்தான். சுல்தான் சிறுகாப்புடன் சித்தூரில் பிரவேசித்தது தனக்கு அதிககௌரவமென்று பீம்சி நினைத்தான். ஆகவே இப் பூர்ண நம்பிக்கைக்குப் பதிலாக சுல்த்தான் சித்தூரிலிருந்து

திரும்பிப்போகும்பொழுது பீம்சியும் சித்தூர் எல்லையைத்தாண்டி வெகுதூரம் அவன் கூடவே போனான். இதுதான் அலாவுதீன் தீய எண்ணத்திற்குத்தக்க சமயம். சுல்தான் சித்தூருக்கு வெளிப்புறத்தில் தன் போர்ச்சேவகர்களை ஒளித்து வைத்திருந்தான். ஆகையால் அலாவுதீன் பீம்சியைக் கைதியாக்கினான்.

பீம்சியை விடுதலைசெய்வதாகச் சொல்லிப் பத்மினியை சுல்தான் இப்பொழுதுவேண்டினன். சிறிது தாமதித்து இராணி தன் புருஷன் விடுதலைக்காகத்தான் சரணமடைவதாய்ஒத்துக்கொண்டு தன் அந்தஸ்த்திற்குத் தக்கபடி தன்னுடன் சிலவேலைக்காரிகளைக்கொண்டுவரத்தடை செய்யாமலிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அதற்கு சுல்தான் அநுமதி அளித்தான்.

குறிக்கப்பட்ட நாளில் இராணி பல்லக்கொன்றில் சித்தூரிலிருந்து பிரயாணமாயினாள். அவருடன் கூட எழுநூறு டோலிகள் சென்றன. அவைகளில் வேலைக்காரிகளிருப்பதாக எல்லாரும் எண்ணினார்கள். டோலிகள் அலாவுதீன் கூடாரத்தை நெருங்கியவுடனேபுருஷனுடன் கடைசி அநுமதிபெறப் பத்மினிக்கு அரைமணி நேரமளிக்கப்பட்டது. எழுநூறுடோலிகளும் கூடாரங்களினிடையில் இறக்கப்பட்டன. அவைகளிலுள்ளோர் அவைகளிலேயே யிருந்தனர்.

சுல்தான் உண்மையாக பீம்சியை விடுதலை செய்ய நினைக்கவில்லை. பத்மினியும் வந்து விட்டதால் இருவரும் தன் வசப்பட்டார்களென்று கருதினான். பீம்சிக்கும் பத்மினிக்கும் நேர்ந்த சந்திப்பின் நேரத்தினால் சுல்தான் பொறுமைகொண்டான். பிறகு மனைவிவந்த பல்லக்கில் பீம்சி ஓடிவிட்டதாக சுல்தானுக்குச் செய்தி எட்டியது. டோலிகளிலிருந்து எழுநூறு போர்ச்சேவகர்கள் ஆயுதங்களுடன் வெளிக்கிளம்புவதையும் கண்டான். இவர்கள் டில்லி போர்ச்சேவகர்களின் மத்தியில் பிரவேசித்து சண்டை செய்யலாயினர். பத்மினி இச்சந்தடியில் தப்பித்துக்

கொண்டோடி சித்தூரில் தன் நாயகனை அடைந்தாள். பீம்சி பத்மினி ஆகிய இருவரின் அபிமானத்திற்காக உயிரைவெறுத்துச் சண்டை செய்த வீரமுள்ள எழுநூறுபேரும் கொல்லப்பட்டனர்.

பிறகு சித்தூரைப் பன்னிரண்டு வருஷகாலமாய் அலாவுதீன் முற்றுகை போட்டான். கற்பாறைப்போன்ற சித்தூர்க் கோட்டையை அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கோட்டையிலிருந்த அநேகர் அவமானத்தைவிட உயிர் நீத்தல் மேன்மையென்றெண்ணி இவ்வுலகத்தை விட்டகன்றனர். விறகுகளை அடுக்கி எரித்து ஸ்திரீகள் வரிசையாய்ப் போய்த் அக்நியில் விழுந்திறந்தனர். பீம்சியும் மற்றும் சில ரஜபுத்திரர்களும் குங்கும வஸ்திரங்கள் தரித்து தீயில் விழுந்து உயிரை விட்டனர். சிலர் தப்பித்துக்கொண்டு அரவலி (Aravalli) குன்றுகளுக்குப் போய் விட்டனர்.

சந்திர வதனத்தையுடைய பத்மினி புருடனைப் பின் தொடர்ந்து ஸ்வர்க்கலோகம் சென்றனள். புருஷ பக்தியையும், கௌரவத்தின் மேன்மையையும் நன்குணர்ந்த பத்மினியின் சரித்திரத்தைப் படிப்போரிருதயம் உருகுமென்பதற்கையமில்லை. எவருக்கும் சந்தோஷத்தை விளைவிக்கும்படியாகத் தற்காலத்தில் தீயில் விழுந்து உயிர் நீத்தலவசியமன்று. ஏனெனில் தற்கால ஆளுகையில் அலாவுதீனைப்போன்ற கொள்ளைக்காரர்களுக் கிடமில்லை.

R. S.

ஆசாரம்.

நல்ல ஆசாரங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்பதே சான்றோருடைய கொள்கை. ஆசாரங்கள் சிலர் கருதுகிறபடி விடியாமுன் முழுகுதல் எச்சில் தீட்டின்றி யிருத்தல் முதலியவை மட்டு

மல்ல. இவைகள் சரீராரோக்கியத்தின் பொருட்டேயாகுமாதலால் "நான் மனிதன்" என்கிற அறிவுடையாரெவரும் அதாவது சாதாரணவறிவுபெற்று மிருகத்தினும் நாம் மேம்பாடுடையேம் என்றுணரும் மாந்தரெவரும் அனுசரித்தலியற்கை. இவைகளன்றி வேறு ஆசாரங்கள் எட்டுள்ளன. அவைகளையனுசரித்தலே இகபரசாதகமாய் நிற்பதாகும். அவையாவன செய்பந்நன்றியறிதல், பொறுமை, இனியவார்த்தை, எந்த உயிர்க்கும் தீங்குசெய்யமை, கல்வி, உலகநடையை அறிதல், அறிவுடைமை, நல்லசிநேகம்என்பனவாம். இவைகளனைத்தும் ஒருவனிடத்தில் அமைதல் அவன் செய்த பூர்வபுண்ணிய பலத்தாலன்றி ஏற்படாது. இந்த எட்டு. ஆசாரங்களும் எவனிடத்தமைகின்றனவோ அவனையே தேவர், மனிதர், மற்றவராலும்கொண்டாடப்படும் தெய்வமெனத்தொழினும் பொருந்தும்.

பாருங்கள் மற்ற ஆசாரங்கள் அதாவது கேவலம் தேகசுத்தத்தின்பொருட்டுக் கொள்வதாகிய ஸ்நானம் முலியன ஒருவனிடத்திருந்து மேற்கூறிய ஆசாரங்கள் எதுவும் இல்லாதொழியின் அவனை அறிவுடையோர் மனிதனெனக் கொள்வாரோ? அத்தகையோனை உலகவஞ்சகனென்பதல்லவா பொருந்தும். அவன் இருப்பதினும் இறப்பதன்றோமேல்? முதலாசாரமாகிய செய்ந்நன்றிமறத்திலினும் தீது வேறொன்றுளதோ?

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்றார் நமதாசிரியர் திருவள்ளுவர் செய்யந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை (க்ஷேமமில்லை) என்றார். இரண்டாவதாகிய பொறுமை மானுடன் கொள்ளத தக்க சிறந்த ஆசாரமாகும். "பொறுத்தார் புவியாள்வார் பொங்கினார் காடாள்வார்" என்னு முதுமொழி மறத்தற்பாலதோ! பொறுமையால் ஒருவனுக்குண்டாகும் பெருமையை எடுத்துக் கூறுவது மியலுமா? மகான்களும் அதாவது தவசித்தியுடையார் சிறந்தஆபரணமாகக் கொள்வது பொறுமையேயாம். பொன்னாலாகிய ஆபரண

மன்று. இந்த ஆபரணத்திற்கும் அந்தஆபரணத்திற்கும் உள்ள பெரும் வித்தியாசம் என்ன? என்பதைப்பற்றி ஆராயுமறிவுடையோ னொருவன் பொன்னுலாகிய ஆபரணத்தைப் பூண்டுகொள்ள ஒருபோதும் நினையான். இவ்விதமே ஸ்திரீகளும் நினையார். நமது நாட்டில் ஸ்திரீகள் அநேகர் சாதாரணமாக அணிய வேண்டிய ஆபரணத்தையடைந்தும் வீணாசைகொண்டு தங்கள் புருஷனை ஆபரணத்திற்காகத் தொந்தரை செய்கிறார்கள். அந்தோ! இதனாலபிரயோசனம்! என்ன? ஆபரணமும் ஆடையும் கர்வத்தை யுண்டாக்குமே தவிர வேறெதையும் பயவாது. பொறுமையை ஆபரணமாகக் கொண்டவர்களுக்கு இகம்பர மிரண்டுலகம்பணியும். ஈசனும் எதிர்நின்று பேசும். இனிவேறெதுவாகும் மானிடன் விரும்புவது? "ஒறுத்தார்க் கொருநாளையின்பம்பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்" என்றார் திருவள்ளுவர்.

வரும்.

எறும்புகள்.

தங்கள் உணவைச்சம்பாதித்து, வாசஸ்தலத்திற்கும் அதை தூக்கிக்கொண்டு சேர்க்கும் புத்திக்திறமை மிகச்சிறிதும் அற்ப ஜந்துவுமாகிய எறும்புகளுக்கு அமைந்தது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதே. ஒருநாள் ஒரு எறும்பு தன்னால்தூக்கமுடியாத ஒரு மரத்துண்டை தூக்கிச்சென்றது. அதை ஒருபிரபு பார்த்தார். மற்றவைகளும் இதைப்போலவே தங்கள் வேலையைச்செய்து கொண்டிருந்தன. கொஞ்சநேரத்துக்கெல்லாம் அந்தத்துண்டை உயரே தூக்கிச்செல்லும்படி நேரிட்டது. அது தன்னால் கூடியமட்டும் பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. இதைத் தெரிந்துகொண்ட நாலுஐந்து எறும்புகள் பின்னால் வந்து தூக்கித்தள்ளிற்று. அது சமபூமியில் வந்தவுடன் அவைகள் போய்விட்டன. இந்தத்

துண்டு ஒரு புறத்தில் கனமாயும் மற்றொரு புறத்தில இலேசாயு மிருந்தது. இதை அந்த எறும்பு இரண்டு மரக்கட்டைகளின் நடுவே இழுத்துக்கொண்டுபோக முயன்றது. ஆனால் அதனால் முடியவில்லை. ஆகவே அதைப்பின்னே கொஞ்சம் தள்ளி மூலை யைத்திருப்பி மறுபடியும் இலகுவாக இழுத்துச் சென்றது. தென் அமெரிக்காவில் சிலதேசங்களில் முற்றிலும் புதிதான ஒரு வகை எறும்புகள் கோதுமைக் களஞ்சியங்களுக்கு கூட்டங் கூட்டமா கப்போய் ஆங்குள்ள கோதுமைச் சாக்குகளிலிருந்து ஏராள மான கோதுமையைத்தூக்கிக் கொண்டுபோய் விடும். ஒவ்வொரு வீட்டுமூலையிலும் பொந்துகள் செய்து அதன்வழியாகத்தானியங் களைத்திருடிச்செல்லும். அவை ஒருபோதும் களைத்துப்போகிற தில்லை, எவ்விதகஷ்டத்தையும் நீக்கிக்கொண்டு, தேசமுழுவதும்ஒரே எறும்பாகத் தானேயிருக்கும். நீங்கள் ஒருதின்பண்டத்தை வீட் டுக் கூரையில் கட்டித்தொங்க விட்டுவையுங்கள். சற்று நேரத் துக்கெல்லாம் ஏதாவது ஒரு எறும்பு அதைக்கண்டு பிடித்து மற்ற நேயர்களிடத்திலும் தெரியப்படுத்தும். பிறகு இந்த எறும்பு பட்டாளத்தின் தலைவனைப் போல மற்றவைகளை அவவி டத்திற்கு அழைத்துக் கொண்டு போய் கயிறு வழியாகக்கீழே யிறங்கி அந்தத் தின்பண்டத்தைத்தின்று விடும். மற்றும் சில வேளைகளில் ஒருபாத்திரத்தில் தண்ணீர்வார்த்து. மற்றொரு பாத் திரத்தில் பக்ஷணத்தை வைத்து அதைத்தண்ணீரில் வைத்து விடு வது வழக்கம். இந்த எறும்புகள் ஜலத்தில் ஒருபாலமாகக் கட்டி அதுவழியாகப்போய்தின்றுவிடும். கர்னல்வைக்ஸ்என்பவர்எறும் புகளைப்பற்றி ஒருவியாசம் எழுதுகையில் சொல்லுகிறார். எங்கள் வீட்டில், நாங்கள் பழங்கள் முதலியனவற்றை மேஜைகளுக்குள் வைத்துவிடுவது வழக்கம். அந்தமேஜைகளின் நாலுகால் களையும் நாலு பீங்கான் தட்டில் ஜலம ஊற்றி அதற்குள்வைத்து விடு வது வழக்கம். இந்தத்திருட்டு எறும்புகள் ஜலம் வற்றினவுடன் அந்தக்கால்களின் வழியாக ஏறிப்பக்ஷணத்தைத் தின்று விடும். பிறகுநான் அந்தத்தட்டுகளை டர்பன்டயின் எண்ணெயால் நிரப்பி

விட்டேன். இந்தத்திருட்டு எறும்புகள் மறுபடியும் வந்து குவிந்து விட்டன. எனக்கு ஆச்சரியம் கிவிட்டது. எனக்கு அது என்ன விதமாக வந்தது என்று தெரிய வில்லை. தற்செயலாக அங்கே ஒரு எறும்பு சுவர் வழியாக வந்து மேஜைமேல் குதித்தது. அது என்னவிதமாகக் குதித்ததென்று பார்த்தேன். இன்னும்ஒரு எறும்பு அங்கே வந்து குதித்தது. ஒவ்வொரு எறும்பாக இதே விதமாகக் குதித்தது. இது சுபாவம் என்று போய் விட்டேன்.

C. நடேசன்.

கங்கா ஸ்நானம் செய்யச்சென்ற அந்தணன்.

(தொடர்ச்சி.)

"நான் வீட்டுக்குப்போகக் கூடாமையால் நேற்றிரவு இங்கு படுத்துக்கொண்டு வெகுநேரம் இப்பாக்கை வாயிற்போட்டுக் கடித்துப்பார்த்தேன், முடியவில்லை. அதை இம்மாடத்தில் உமிழ்ந்துபோனேன். அதைப் பட்டென்று துண்டித்த உமது பல்லின் வலிமை எனது திருஷ்டிக்குள்ளாகாமல் இருக்கவேண்டும்". என்று வாழ்த்திப் போயினள்.

பிறகு சங்கரசுப்பையர் வாய் பேசாமல் "நமக்கு புண்ணின்மேல் புண்புறப்பட்டது போலல்லவா ஒன்றின்மேலொன்று வருகிறது. இதென்ன காலமிது" என்று நினைத்து மகாவருத்தமுற்று அவ்விடம் விட்டுப் புறப்பட்டு மற்றொரு ஊருக்குச்சென்று அங்கு ஓர் பூசுரன் வீட்டுத் தெருத்திண்ணையில் உட்கார்ந்தார். அப்பொழுது குளத்திற்குப் போய்விட்டு வந்த அவ்வீட்டு விதவை "ஐயா! நமஸ்காரம் இன்று ஓர் பிராமணனுக்கு அன்னமிட உத்தேசித்திருந்தேன். நல்ல வேளையாய்த் தாங்கள் வந்து

சேர்ந்தீர்கள்; இது என் அதிர்ஷ்டம். நீர் இங்கேயே அமுது கொள்ளும். எழுந்து குளத்திற்குச்சென்று ஸ்நானம் முதலியன முடித்துக்கொண்டு சீக்கிரம் வாரும்" என்றாள். சங்கரசுப்பையர், "சோறு எங்கிருந்தாலும் கிடைத்து விடுகிறது. இவள் இல்லாவிட்டால் இன்னொருவன் போடுகிறான். எச்சின் மேலிச்சில் தின்ற இந்தப் பாபத்தைத் தொலைப்ப தெங்ஙனம் என்று சிந்தித்து வருத்தமுற்றுச் சற்று யோசித்துக் கடைசியில் "பல நீட்டுக் கொருமுழுக்கு" என்பார்களல்லவா! அதுபோல் நாம் எல்லாவற்றிற்கும் கங்கைக்குப்போய் ஒரு முழுக்குப்போட்டு விடுவோமென்று மனந்தேறி, அங்கிருந்து எழுந்து விரைவாகக் குளத்திற்குச் சென்று ஸ்நானஞ்செய்து திரும்பினான்.

சங்கரசுப்பையருக்கு அவ்வமங்கிலி இலைபோட்டு உபசரித்து அன்னம் கறி முதலியன யிட்டுப் புசிப்பித்து "ஐயா நான் உங்களுக்குப் போதுமானபடியே சமைத்து வைத்துத் தண்ணீர் கொண்டுவரச் சென்றேன். அச்சமயம் பார்த்து பாழும் நாயொன்று உள்ளே நுழைந்து அதிற் கொஞ்சம் தின்றுவிட்டுப் போய்விட்டது. என் செய்வேன்! பொறுத்துக்கொள்ளுங்களென்று உபசார வார்த்தை சொல்லினள்.

சங்கர சுப்பையர் என்ன செய்வார் பாவம்! முதலில் பறையனெச்சில், பிறகு உதகி எச்சில் மூன்றாவது சுணகனெச்சில் இப்படி யொன்றின்மே லொன்று நேரிடுவதால், மிக்க வருத்தமுற்று, "இனி யெங்கும் உணவு கொள்வதுமில்லை சயனிப்பதுமில்லை" எனத்தீர்மானித்துக்கொண்டு நேரே கங்கைக்கு வந்து கங்கையைத் தரிசித்து அங்கே மணிகர்ணிகை முதலான துறைகளில் பிராமணர் அநேகர் ஸ்நானம் செய்வதும் பூசை புரிவதும் புராணம் படிப்பதுமாயிருந்ததினால் தமது பாவங்களுக்குச் சங்கற்பஞ் சொல்லி ஸ்நானஞ்செய்ய வெட்கப்பட்டு எல்லாத் துறைகளுக்கு மப்பாலிருந்த துறையிலிறங்கி முழுக எத்தனித்தான்.

அத்துறை பறையர் தங்கள் தங்கள் இனத்தாருடைய அஸ்தியைக் கொண்டுவந்து போட்டுமுழுகிப்போகும் இடம். அந்தோ! இந்தப் பேதைப்பிராமணன் அதனையறியாமல் அங்கு ஆழத்தில் இறங்கி அமிழ்ந்து ஸ்நானம் செய்து கொண்டிருக்கையில் சில புலையர்கள் அவிடத்தில்எலும்பைக்கொணர்ந்துநதியிலெறிந்துவிட்டுத்தாங்களும் முழுகி எழுந்தனர். இதற்குள் வேதியனும் முழுகி எழுந்தனன். அச்சண்டாளர்உடனேசங்கரசுப்பையரைச்சூழ்ந்துகொண்டு அவரைக் கட்டிக்கொண்டு எங்கள் அப்பனே! வீட்டிற்கு வாபோவோமென்று வலிமைசெய்தார்கள். சங்கரசப்பையர் "அந்தோ! நான் பிராமணன். உங்களினத்தவனல்ல! என் மார்பில் பூநூலைப்பாருங்க"வென்றார். அவர்கள் அவரை விடாமல்"உங்கப்பனிறந்தால் அவன் நல்ல ஜனனமெடுத்துக் கரையேறுவான்" என்று எமது புரோகிதர் சொன்னார். அவ்விதமே நீ பிராமணஜென்மமெடுத்துக் கரையேறினாய், உன்னைவிடமாட்டோம் நம் வீட்டுக்கு வந்து உணவுண்டு பின் வேண்டுமாகில் தனியேயிருந்து வாமென்று கட்டாயப்படுத்தினர் சங்கர சப்பையர் குய்யோ முறையோவென்று கூறித் தலையில் அடித்துக்கொண்டு அழுதார். அப்போது விழியிற்போய்க் கொண்டிருந்தவர்களும் மற்றபிராமணர்களும் வழக்கைக்கேட்டு நகைத்துப்பேதை பிராமணனை விடுவித்தார்கள். அந்தோ! அந்த அந்தணனன் காசிக்குச் சென்றும் அவன் கர்மம் தொலையவில்லையே! பாபம் பாபம்.

முத்தம்மாள்.

நல்ல வார்த்தைகள்.

(1.) காலத்தை வீணாக்காதே. பிறகு எவ்வளவு பணம் செலவு செய்தாலும் கழிந்த நாளை யடையமுடியாது.

(2.) உடுப்பில் டம்பம் செய்துகொள்வது பேதமை. நம்மை விடஅழகாகமயிலும் சிலந்திப்பூச்சியும் கடவுளால் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் காண்க.

(3.) இன்றையதினமும் நாளையதினமும் நீ செய்யக்கூடிய வேலை யெல்லாவற்றையும் செய்ய உனக்கு இன்றையதினமே போதுமான அவகாசமுண்டு. ஆகையால் நாளையதினம் வெலை செய்யலாமென்று நினைப்பது பிசகு. ஏனெனில் நாளையதினம் நீ பிழைத்திருப்பது என்ன நிச்சயம்.

(4.) நன்மைகடைப்பிடி என்ற ஔவை வசனப்படி நாம் நன்மையைக் கடைப்பிடிக்கவேண்டும். அப்படியில்லையாகில் நம்மிடத்து துர்க்குணம் தானகவே வரும்.

(5) "நூற்பலகல்"என்னும் ஔவைப்பிராட்டியார் அமுத வசனப்படி பலநூலையும் கற்கப் பிரயாசைப்படவேண்டும். ஆனல் படித்து முடித்தபுத்தகத்தை அடிக்கடிச் சிந்திப்பதோடு கூடவே மற்ற நூலையும் பார்க்க வேண்டும். படித்த நூலை மறக்கச் செய்துகொண்டு வேறு கற்கமுயலல் விபரீதத்திற் கிடமாகும்.

லலிதாம்பிகை.

வைத்தியக் குறிப்பு

காது வலிக்கு

வெள்ளுள்ளிச் சாற்றை காதில் விடவும். அரை அவுன்ஸ் வேப்பெண்ணெயில் ஒருகுண்டுமணி எடை அபினிக்கலக்கி அதில் பஞ்சைநனைத்துக் காதுக்குள் 2.3. சொட்டுவிட்டு அந்தப்பஞ்சாலடைத்து விடவும்.

பருக்கள்

நவாசாரத்தைப் பன்னீரில் கரைத்து புண்ணின் மேலிடவும் 2. மாவில்கள்ளுசேர்த்து வெந்துவைத்துக்கட்டவும். 3 வலியும் சிவப்புமிருந்தால் அட்டைவிடவும். லேசாய்பிராந்தி சாப்பிடவும் 4. மஞ்சள்நிற இங்கிலீஷ் சவுக்காரமும் சர்க்கரையும் பசு

வெண்ணெயும் சேர்த்துப் புண்ணிலிடவும். சீலையில் தடவிவைக்கிறது மிகுந்த நயம்.

விக்கலுக்கு.

தாமரைமணியும் விளாம்பழத்தையும் அறைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலேதண்ணீரைக்கொடுக்கவும் "பிள்ளைவிளாங்காய்விக்கினல் தண்ணீர்" என்றபழமொழியை நேட்டீவ் பாலர்கள் கூடச் சொல்லுவார்கள்.

நகச்சுத்துக்கு.

எலுமிச்சம் பழச்சாறுவிட்டுப் புண்ணைக் கழுவவும் 2 சீனம் வெண்காரம் காசுக்கட்டி இவைகளைத் தேனிலும் எலுமிச்சம் பழரசத்திலும்லரைத்திச்சுத்துக்குப்போடவும் (3) மாபோல்டீஸ்வைத்துக்கட்டி ஆறும்பருவமாகிறபோது பிளாஸ்திரியை இடவும்(4) புண்ணதிகமாய்ச் சிவப்பாயிருந்தால் சுற்றித்துரிசைத் தடவவும். (5) சீனத்தண்ணீரையாவது காரத்தண்ணீரையாவது விட்டுக் கழுவத்தீரும்.

தேள்கடிக்கு.

காஞ்சூரம் வேரை மூத்திரத்தாலரைத்துப் பூசவும் (2) இங்கிலீஸ் மருந்தாகிய (டர்பென்டய்ன்) என்றதைப் பிரயோகிக்கவும். (3) அறுகம்புல் தோகைகளைக்கொண்டுவந்து கசக்கி அதில் வருகிற சாற்றை நசியமிடவும் தீரும்.

வைத்தியரக்ஷகர்.

தசரத சக்ரவர்த்தியின் விவாக விவரம்.

(ஆனந்த ராமாயணம்.)

அக்காலத்தில் அயோத்திக்கு அருகாமையில்கோசலதேசத்திலிருக்கும் கோசலமென்கிற பட்டணத்தில் மகா புண்ணியம் பெற்ற கோசலராஜன், யௌவனமடைந்த கௌசல்லியை என்கிற தனது கன்னிகைக்குத் தசரதமகாராஜனை வாஞகை வரிப்பதற்குத் தகுந்த முகூர்த்தநாள் நிச்சயஞ்செய்துகொண்டு தூதர்களைத் தசரத மகாராஜனிடம் அனுப்பினான். தூதர்கள் அவரிடம் சென்று சங்கதி தெரிவித்து விவாகத்தை நிச்சயித்துக்கொண்டு திரும்பிட்டார்கள். இப்பொழுது தசரதர் மந்திரிமார்களுடனும், தமது உறவினர்களுடனும் நண்பர்களுடனும், மாகதர், வந்திகள் முதலியவர்கள் துதிசெய்யவும் தாசிகள் பாடவும், இரத்தின தீபங்கள் பிரகாசிக்கவும், சேனைகள் காவல் செய்யவும், சரயுநதியில் இராத்திரியில் ஓடம் ஏறி ஜலக்ரீடை செய்துகொண்டிருந்தார். இதே தருணத்தில் லங்கேஸ்வரனை இராவணன் இலங்கையில் பிர்மதேவரை வரவழைத்து, அவரைப்பார்த்து எனக்கு யாரால் மரணம் சம்பவிக்குமென்பதை உண்மையாகச் சொல்லுமென்று வினவினான். அதைக்கேட்ட பிர்மதேவன் தசரதமகாராஜனுக்கும் கௌசல்லியைக்கும் ஆதிநாராயணர் இராமலக்ஷ்மண பரத சத்துருக்கனர்களாக அவதரிப்பார். அவர்களுள் இராமனால் உனக்கு மரணமென்றும் ஏ இராவணா! இன்றைக்கு ஐந்தாவது நாளில் கோசலராஜன் வேதியர்களைக்கொண்டு கௌசல்லியைக்கும் தசரதமகாராஜாவுக்கும் விவாகம் நடத்த நிச்சயித்திருக்கிறானென்றும் பதில் கூறி பிரமலோகம் சென்றார்.

அதைக் கேட்ட இராவணன் அப்பொழுதே புட்பக விமானமேறி, அநேக இராட்சதர்களுடன் அதிவேகமாய் அயோத்தியாபுரி சென்று அங்கே ஜலக்ரீடை செய்யும் தசரதனைக் கண்டு

அகோரமான யுத்தஞ்செய்து அவரை ஜயித்து அவ்வோடத்தைக் காலாலுதைத்துத் தள்ளியுடைத்து விட்டான். அக்காலையில் அவ்வோடத்திலிருந்தயாவரும் நதியில்விழுந்து முழுகிஇறந்துபோக, தசரதமகாராஜனும் அவருடைய மந்திரி சுமந்திரனும் உடைந்த ஓடத்தில் ஒரு பலகையைப் பிடித்துக்கொண்டு அதன் மீதேறி மெதுவாக சரயுநதியின் பிரவாகத்தின் வழியே கங்காநதிக்குப் போய்அவ்விடமிருந்து சமுத்திரஞ்சென்று ஈஸ்வரகடாட்சத்தால் அதன் மத்தியில் உயிரோடு பிழைத்திருந்தார்கள். இதற்குள்இராவணன் கோசலராஜனிடம் சென்று அவனிடம் போர் செய்து அவனை வென்று அவனுடைய குமாரத்தி கௌசல்யை என்பவளை அபகரித்துக்கொண்டு ஆகாய மார்க்கமாய்ச் சந்தோஷத்துடன் லங்காபட்டணம் போகும்வழியில், அங்கே சமுத்திரத்தில் வசிக்கும் ஒரு திமிங்கலத்தைக்கண்டு தேவர்கள் நமக்குச் சத்துருக்களாகையால் மறைந்து வந்து எவ்விதமாவது இப்பெண்ணைக் கொண்டுபோய் விடுவார்கள். ஆகையால் இத்திமிங்கலத்தினிடத்தில் நாம் கேட்ட போது கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டு இப்பெண்ணைக் கொடுப்போமென்றெண்ணி பெண்ணை ஒரு பேழையிலடக்கஞ்செய்து அதனிடம் கொடுத்துத் தன்பட்டணம் சென்றான். அத்திமிங்கிலமும் அப்படியே தன்வாயில் கௌவிக் கொண்டு சுகமாக சமுத்திரத்தின் மத்தியில் சஞ்சரிக்கும்போது தன்னிடம்போர்செய்யஎதிர்த்துவரும் வேறொருதிமிங்கிலத்தைப் பார்த்து அதனோடு போர்செய்ய எண்ணி அப்பெட்டியை அருகிலிருக்கும் தீவில் வைத்துப் போர்புரிந்துகொண்டிருந்தது. இதன் மத்தியில் ஓடப்பலகையைத் தெப்பமாகக்கொண்டு வரும் தசரதமகாராஜாவும் மந்திரியும் அத்தீவுக்கு வந்து, அப்பெட்டியைப் பார்த்து அதைத்திறந்து அதனுள் இருப்பவள் கௌஸல்யை என்று கண்டு ஆச்சரியமுற்று ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்து அப்பெண்ணை காந்தர்வவிவாகஞ் செய்து சந்தோஷமடைந்து, மூவருமாக அப்பெட்டியினுட் புகுந்து முன்போலவே மூடிக் கொண்டார்கள். பின் முன் நடந்தவரலாற்றை ஒருவர்க்கொருவர்

தெரிவித்துக்கொண்டார்கள். இவர்கள் காந்தர்வ விவாகம் செய்த கொண்டவேளை முன்ஏற்படுத்தின முகூர்த்தவேளையாகவே இருந்தது. அத்திமிங்கிலம் போரில் ஜயமடைந்தபின் முன்போல் அப்பெட்டியை வாயிற் கௌவிக்கொண்டது. அப்பொழுது இராவணன் பிர்மதேவரை வரவழைத்துச் சபையில்வைத்துக்கொண்டு பிர்மதேவரே நீர் சொன்னவார்த்தை பொய்யாய்விட்டது. தசரதனைக்கொன்றுவிட்டேன். கௌசல்வியையும் இரகசியமாகமறைத்துவிட்டேன் என்று கூறினன். அதைக்கேட்ட பிர்மதேவன் நகைத்து இது புண்ணியதினம் என்றுறக்கச்சொன்னார். இராவணன் பரபரப்புடன் நீர் என்ன கூறினீரென்றுகேட்டான். அதற்கு பிர்மதேவர் ஏ தசக்ரீவனே! தசரதருக்கும் கௌசல்லியைக்கும் முந்தியே விவாகம் நடந்தாய்விட்டதென்று கூறினர்.

இப்படிச் சொல்லக்கேட்டதும் இராவணன் பிர்மதேவனுடைய வார்த்தையைப் பொய்யாக்கக்கருதி உடனே திமிங்கிலத்தினிடமிருந்து அப்பெட்டியைத் தூதர்கள் மூலமாக வரவழைத்து பிர்மதேவன் முன்னிலையில் வைத்துத்திறந்தான். திறந்ததும் அதனுள் மூன்று பேரிருக்கக் கண்டு திடீரென்று பயந்து கோபங்கொண்டு, அவர்களை வெட்டிவிடுவதற்குக் கையில் கத்தியை எடுத்தான். அதைப்பார்த்துப் பிர்மதேவன்? ஏதாசனன! அவசரமாக என்ன காரியம் செய்கிறாய்? இப்பொழுது சாகசஞ் செய்யாதே. ஒரு பெண்ணை அடைத்து வைத்த பெட்டியில் இப்பொழுதுமூவரிருக்கிறார்கள். இவர்கள்கோடிக்கணக்கான மனிதர்களாக ஏன் ஆக மாட்டார்கள்? அவர்களுக்குள். இராமனும்ஏன்உண்டாகமாட்டான்? இப்பொழுதே ஏன் அவன் உன்னைக் கொல்லமாட்டான்? உனக்கு இருக்கும் ஆயுளையும் இப்பொழுதே ஏன் அழித்துக் கொள்ளுகின்றனை? வரப்போகிறதைபின் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுதுவேண்டாம்.ஆகையால் இப்பெட்டியைத்தூதர்கள் மூலமாகச் சாகேத நகரத்துக்கு அனுப்பிவிட்டு நீ சுகமாயிரு. என்வார்த்தை ஒருகாலத்திலும் பொய்யாகாதென்று நிச்சயமாய்றிந்துகொள். கருமகதியை அறிய முடியாதாகையால் நடக்கப்போவது கட்டாயமாய் நடந்தே தீரும் என்று சொன்னர்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதசானன்பயந்து அதை உண்மை என்றெண்ணி அப்பெட்டியைத் துரிதமாய் சாகேதக நகரத்துக் குக்கொண்டுபோகத்தூதர்களுக்கு உத்தரவுதந்து அனுப்பினான். அவர்கள் அப்பெட்டிபை எடுத்துக்கொண்டு சாகேதநகரம்போய் அவ்விடத்தில் அதை எறிந்துவிட்டுத் திரும்பி இராவணனிடம் வந்துசேர்ந்தார்கள். அப்பொழுது அயோத்தியாநகரத்தில்வசிக்கும் மனிதர்கள் தசரத மகாராஜனைப்பார்த்து சந்தோஷங்கொண்டு, தன்பெண்ணைத் தசரதமகாராஜனுக்குக் கலியாணம் செய்துகொடுத்துத் தன் ராஜ்ஜியத்தையும் அவருக்கே தந்து பட்டாபிஷேக முஞ்செய்துமுடித்தான். அதுமுதல் சூரியவமிசத்தாருக்குக்கோசலேந்திரரென்கிறபெயர்வந்தது. பிறகுதசரதமகாராஜன் மகதராஜன்குமாரத்தியாகிய சுபத்திரையையும் அதன்பிறகுகேகயராஜன் புத்திரியாகிய தாமரைமலர்போன்ற கண்களையுடைய கைகேயியையும் விவாகம் செய்துகொண்டு, பின் எழுநூறு பெண்களைக் களத்திரங்களாகக் கொண்டு அநேக போகங்களை யனுபவித்து வந்தான்.

யோகநித்திரை.

"தூங்காமற் றூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்"

யோக நித்திரை என்பது சாதாரண நித்திரையினின்றும் முற்றும் வேறானது. இந்தயோகநித்திரையை ஆங்கிலேயர் ஹிப்னடிஸம் என்றும் மெஸ்மெரிஸம் என்றும் கூறுவார்கள். ஹிப்னல் உன்னும் கிரீக்வார்த்தைக்குரித் திரை என்று பொருள். அந்தக் கிரீக்வார்த்தையிலிருந்துதான் ஹிப்னடிஸம் என்னும் சொல்உண்டாயிற்று. டாக்டர் ப்ரெயிட் என்பவர், மெஸ்மெரிஸத்துக்குப்

மனோதத்துவத்துக்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டுவதற்காக ஹிப்னாடிஸம் என்னும் இவ்வார்த்தையை முதன் முதல் உண்டாக்கினார். ஆனாலும் மெஸ்மெரிஸம் என்பதற்கு ஹிப்னாடிஸம் என்பதற்கும் வித்தியாசம் உண்டு மெஸ்மர் என்னும் ஒரு ஜெர்மன்வைத்தியர் இந்தஅரிய சாத்திரத்தைக்கண்டுபிடித்தாராலால் மெஸ்மெரிஸம் அவருடைய பெயரையே கொண்டு விளங்குகிறது. இவர் அந்த மெஸ்மெரிஸம் என்பதைக் கண்டு பிடித்து அதை அனுஷ்டித்து வந்ததில் வெற்றி பெற்றார்.

மெஸ்மெரிஸம், ஹிப்னாடிஸம் என்னும் இவ்விரண்டு முறையும் நித்திரையைப் பற்றியே கூறுகிறது. ஆனால் நித்திரையை உண்டாக்கும் விதத்தில் மாறுபாடு ஏற்படுவது போல் நித்திரையிலும் வித்தியாசம் ஏற்படுகிறது. ஹிப்னாடிஸம் வார்த்தை உச்சரிப்பினால் தன்னுடைய வேலையைச் செய்கிறது. மெஸ்மெரிஸம் கண்பார்வையினாலும், கையினால் தடவுதலாலும் நித்திரையை உண்டாக்குகிறது. இவ்விரு முறையினாலும் உண்டாகும் நித்திரை குணத்தில் வேறுபட்டிருக்கிறது. ஹிப்னாடிக் நித்திரையில் மனம் தன் முழுச்சுவா தீனத்தையும் இழந்து விடுகிறதில்லை. மெஸ்மரிக் நித்திரையிலோ மனம் தன் முழு குணத்தையும் இழந்து விடுகிறது. ஆனால் மனத்தின் ஆற்றல் மிகுந்து விளங்கும். ஹிப்னடிக் நித்திரையில் இப்னாடிஸம் செய்வோன் தன் முழுமனத்தையும் தான் உச்சரிக்கும்வார்த்தையின் மீது செலுத்த வேண்டியவனாகிறான். இப்னாடிஸம் செய்யப்படுவோனோ தன் மனத்தை வேறு விஷயத்தில் செல்லவொட்டாமல் தடுத்து இப்டினாஸம் செய்வோன் உச்சரிக்கும் வார்த்தையில் இலட்சியம் வைக்கவேண்டும். ஆகவே இப்டினாஸத்தினால், இப்னாடிஸம் செய்பவனுக்கும் செய்யப் படுவோனுக்கும், வார்த்தை உச்சரிப்பினால் ஒரு விதமான மன ஒற்றுமை உண்டாகிறதென்பது நன்கு புலப்படும். இவ்விதமான ஒற்றுமை பகிர்முகமாகச் செய்யும் முயற்சியால் ஏற்படும். ஒற்றுமையாகும் மெஸ்மரிக் நித்

திரைக்கு வெளி உதவி ஒன்றும் வேண்டிய அவசியமில்லை. மெஸ்மெரிஸம் செய்வோனுடைய மனது மட்டும் வேலைசெய்யும், இவ்வேலையின் பயனாக உண்டாவது ஆழ்ந்த நித்திரை யாகும் யோககாட்சி, யோகசம்பாஷணை இவைகளெல்லாம் மெஸ்மரிக் நித்திரையினாலேதான் கைகூடற்பாலன, ஆகவே இப்னடிக் நித்திரையைக் காட்டிலும் மெஸ்மெரிக் நித்திரையே மிகவும் பயன் தரக் கூடியது என்பது பெறப்படும். மெஸ்மெரிஸம் ஆனந்த நித்திரையை உண்டு பண்ணி, மனதை அநேக அற்புதலீலைகள் செய்யும் சக்தியுடையது. பலமான வியாதிகளைச் சொஸ்தப் படுத்துவதற்கு இப்னடிசத்தில் ஒருவிதமான முறையும் இன்னும் கண்டு பிடிக்கவில்லை. மெஸ்மெரிஸம் இதற்கு மிகவும் உபயோகப்படுகிறது. இதனாற்றான் இந்தியாவில் பண்டைக்காலத்திலிருந்த யோகிகளும் ஞானிகளும் மெஸ்மெரிஸத்தை அதிகமாக அனுசரித்து வந்தார்கள். மேலும் மெஸ்மெரிக் நித்திரை ஒருவனை மகா யோகியாக்கக்கூடிய ஆற்றலுடையதாயிருக்கிறது.

இதுவரையில் இப்னடிக் நித்திரைக்கும் மெஸ்மரிக்நித்திரைக்குமுள்ள வித்தியாசத்தைப் பற்றிச்சிறிது கூறினோம். இனிச் சாதாரண நித்திரைக்கும், மெஸ்மெரிக் நித்திரைக்குமுள்ள வித்தியாசத்தைப்பற்றிச் சிறிது உரைப்பாம்.

இப்னடிஸம் விஷயமாய்த் தற்காலம் ஆராய்ச்சி செய்கிறவர்களில் பெரும்பாலர் சாதாரண நித்திரைக்கும் இப்னடிக், மெஸ்மரிக் நித்திரைக்கும் அதிக வித்தியாசமில்லை யென்று கருதுகிறார்கள். அங்ஙனம் அவர்கள் கருதுவது பிசகான காரியம்.

சாதாரண தூக்கத்தில் மனதில் அந்தரங்க ஆற்றலும் பகிரங்க ஆற்றலும் புலப்படுகிறதில்லைமெஸ் மெரிஸஞ் செய்கிறவனோ அல்லது இப்னடிஸம் செய்கிறவனோ தன்னுடைய மனதைச் செய்யபடுகிறவர்களுடைய மனசினோடு ஒற்றுமைப் படுத்தினால் மட்டுந்தான் மெஸ்மெரிக் நித்திரையும் இப்னடிக் நித்திரையும் உண்டாகும். சாதாரணமான தூக்கம் இயல்பாகவே உண்டாகக்

கூடியது. நித்திரை உண்டானதும் ஆன்மா தன் அறிவை இழந்து விடுகிறது. ஆன்மா சாதாரணத் தூக்கத்தில் அறிவிழந்திருத்தல் போலவே மெஸ்மரிக் நித்திரையிலும் அறிவிழந்து போகிறது. ஆகவே இரண்டு விதமான நித்திரைக்கும் வித்தியாசமென்ன விருக்கிறது என்று சிலர் கேட்கலாம். மெஸ்மெரிஸம் செய்கிறவன் சொல்லுகிறபடி யெல்லாம் மெஸ்மெரிஸம் செய்யப்படுபவன் செய்கிறதை மெஸ்மரிக்நித்திரையில் காண்கின்றோம். சாதாரண நித்திரையில் இருப்பவன் அவ்விதம் செய்வதில்லை. சாதாரண நித்திரையும் மெஸ்மெரிக் நித்திரையும் ஒன்றல்லவென்பதற்கு இதுவே போதிய அத்தாட்சி. மேலும். இரணவைத்தியர்கள் ஒருவன் மெஸ்மரிக் நித்திரையில் இருக்கும்போது வெகு சுலபமாக ரணவைத்தியமாகிய அறுத்தல் தைத்தல் முதலியவைகளைச் செய்கிறார்கள். வியாதியஸ்தனுக்கு அறுப்பதிலுண்டாகும் வலிமுதலிய எதுவும் தோன்றுவதில்லை. சாதாரண நித்திரையில் இருப்பவன் மேல் ஒரு விரல் பட்டால் உடனே அவன் விழித்துக் கொள்ளுகிறான். இதுவும் மெஸ்மரிக் நித்திரையும், சாதாரண நித்திரையும் ஒன்றல்ல வென்பதை நிரூபிக்கும். ஆனால் சாதாரண நித்திரையை உச்சாரணத்தால் மெஸ்மரிக் நித்திரையாக மாற்றுதல் கூடும். இதில் மெஸ்மரிக் நித்திரைக்கும் இப்னுடிக் நித்திரைக்கும் உள்ள வேறு பாட்டையும் மெஸ்மரிக் நித்திரைக்கும் சாதாரண நித்திரைக்கு முள்ள வேறு பாட்டையும் கூறினும். மெஸ்மரிஸம் இப்னுடிசம் என்பவை நூதனமாக ஏற்பட்டனவா அல்லது ஏற்கனவே உளவாவென்பதைப்பற்றி மறுமுறை எழுதுவாம்.

கோவலன்.

காப்பி ஓட்டலும்

நம்மவர்களும்.

தற்காலத்தில் இச்சென்னையில் காப்பி ஓட்டலில்லாத ஒரு வீதியும் பெரும்பாலும் கிடையாது. காப்பி ஓட்டலில் நடக்கும் அக்கிரமங்கள் பல பல காரங்கள் செய்வதற்கு நெய்க்கு பதிலாகக் குசும்பா எண்ணெயும், இட்டிலி தோசை முதலியவைகளுக்கு மட்ட அரிசி பருப்புநொய்களும் உபயோகிக்கப்படுகின்றன. காப்பித்தண்ணீரில் சிக்காய்த்தூள் போடுகிறார்கள். மேலும் எருமைப்பால் அல்லது (Condensed Milk எனப்படு) காட்டெருமைப்பால அதற்கு உபயோகிக்கிறார்கள். இவற்றால் வரும் கெடுதிகள் பலவென்பது சொல்லாமலே விளங்கும்.

குடியர்களுக்குக் கள்ளுக்கடைகள்போல் நம்மவர்களுக்குக் காப்பிஓட்டல்கள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறு குடியனுடன் சிநேகிப்பவவனும்குடியனுவனே, அவ்வாறேகாப்பிக்குடியருடன் சேர்பவர்களும் அங்ஙனமாவார். ஓட்டலில் உபயோபிக்கப்படும் பாத்திரங்களைச் சரியாகச் சுத்தப்படுத்துகிற தில்லை. மேலும், எல்லா ஜாதியாருக்கும் அவை பேதமின்றி உபயோகிக்கப் படுகின்றன. ஆயினும், சாப்பிடுகிறவர்கள் தூக்கிச்சாபிட்டால் தோஷமில்லை. எல்லோரும் பள்ளர்களையொத்து வாயில்வைத்துக் காப்பியை உறிஞ்சுகிறார்கள். சிலர் குழாய்சலத்தில் ஒரு பாத்திரத்திற் பிடித்துக்கொண்டு அதிலேயே சாப்பிட்ட பாத்திரங்களை அழுத்தி எடுத்து விடுகின்றனர். இங்ஙனம் செய்வதை யொருவரும் கவனிப்பதே கிடையாது. இங்ஙனம் செய்வது சுகாதாரத்திறகுக் கெடுதியாமென்பதை ஓட்டல் காரர்களும் காப்பி சாப்பிடப்போகின்றவர்களும் கவனித்தல் கிடையாது. இவ்விஷயத்தை (Health Officers) சுகாதர உத்தியோகஸ்தர்கள் கவனித்து ஓட்டல் காரர்களைத் தண்டனைக்குட் படுத்தினுற்றான் பாத்திரங்களைக் கழுவும் விஷயத்தில் அவர்கள் ஜாக்கிறதையாக விருப்பார்கள்.

ஒவ்வொருவனும் ஜலபான முதலியன செய்யும்போது பாத்திரங்களை வாயில் தட்டுப்படாவாறு தூக்கிச்சாப்பிடல்வேண்டுமென்று நமது சாஸ்திரத்தில் விதித்திருப்பது சுகாதாரத்தைக்

கருதியே யன்றே? ஒருவர் சாப்பிட்ட பாத்திரத்தைக் கழுவிய பின்னரே வேறொருவர் உபயோகித்தல்வேண்டுமென்னும் கொள்கை ஒருவருக்குத் தொந்து வியாதிகளிருந்தா லவை அன்னியருக்கும் பரவுமென்னும் அபிப்பிராயத்தினுலாம்.

இதுவு மல்லாமல் ஒட்டலில் (Spoon எனப்படும்) சிறு கரண்டிகள் ஏராளமாக வாங்கிவைத்திருக்கிறார்கள். ஒட்டலில் சாப்பிடுகிறவர்கள் வடை, இட்டிலி காராபூந்தி முதலியவற்றுள் எதைச்சாப்பிட்டாலும் வித்தியாசமில்லாமல் அக்கரண்டிகளின் உதவியைக்கொண்டு புலி ஏதாவதொன்றை விழுங்குவதுபோல அப்படி கரண்டியோடு வாயில் திறுத்துகிறார்கள் ஒட்டலில் சாப்பிடுகிறவன் 8 (எட்டு) அணு செலவிட்டாலும் அவன்பசிதீராது; காப்பிசாப்பிடும்போது பசி யாறினதுபோலிருந்தாலும் அஃது உடம்பிறகுக்கெடுதியை விளைவிக்கின்றது. காப்பி உபயோகித்தால் சாப்பாடு சரியாய் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. ஆகவே. காப்பிசாப்பிடும் பழக்கம் மிகக்கெடுதி. இதை விடுவதும் அதிகக் கடினமே. காப்பியை மிதுதிபாகச் சாப்பிடுவதால் மதுமேக ரோக முண்டாகும். ஆதலால் காப்பிக்குப் பதில் கோதுமை அரிசியை வறுத்து மாவாக்கித் தண்ணீரைக்காய்ச்சி அதில் போட்டு வடிததுப் பால்சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டால் தேகவலிமையும் சுறுசுறுப்பும் உண்டாகும். சுகத்தை விரும்புவோன்

கைக்கோவார் மகாராஜரின் பேண்.—குவாலியர் தேசத்து ராஜாவிற்குக் கொடுப்பதாக நிபமித்திருக்கும் கைக்கொவார் மகாராஜாவின் ஒரே பெண்ணுகிய இந்திரராஜகன்னிகை 18-வயதுடையவர்; சென்றவருடம் மெட்ரிகுலேஷன் பரீட்சை பாஸ் செய்தவர்; தமது மாதாபிதாக்களுடன் சென்றவருடம் உலகிற் வந்தவர்; நன்ருக வாசித்தவர். வாசித்த தமது ஒரேபெண்ணை நாகரிகம் பெம்பட்டுள்ள கைக்கொவார் மகாராஜா ஏனே இரண்டாந்தாரமாகக்கொடுக்க விசைந்திருக்கின்றனர்; அதுவுமன்றிப் பெண்டிருக்கப் பெண்கொடுக்க விசைந்தது நாகரிகமறறவர்களுடைய செய்கையாம்.

தூக்குத் தண்டனையினின்றும் தப்பினர்.—அமிரிட்சார் ராணி சாகிபா ஒரு சோர புருஷனை வைத்திருந்தாளென்றும் அவனைப் பின்னர் விஷமிட்டுக் கொன்றுவிட்டனளென்றும் குற்றஞ் சாட்டப்பட்டுக்கீழ்க்கோர்ட்டில் தூக்குத்தண்டனை விதிக்கப்பெற்றனர். இக்கேசு பஞ்சாப்சீப் கோர்ட்டிற்கு அப்பீலாயிருந்தது; அதை விசாரணைக்குவர மிஸ்டர் ஷாதிலால் என்னும் இந்து பாரிஸ்டர் குற்றவாளிபட்சம் வாதிக்க ராணியார் குற்றவாளியல்லவென்று தீர்மானிக்கப்பட்டது நமது கோர்ட்டுத் தீர்ப்புக்கள் தலைகீழாக மாற்றப்படுகின்றன. தூக்குத்தண்டனை விதிப்பது எவ்வாற்றானுங் கூடாத காரியமாமென்பது இதனால் நன்கு வெளியாகின்றது.

காசி ஸேன்டிரல் ஹிந்துகாலேஜுக்கு
காசி மகாராஜாவின் நன்கொடை.

காசி சென்டிரல் ஹிந்து காலேஜுக்கு அவ்வூர் மகாராஜா ஒரு பெரிய கட்டிடத்தை நன் கொடையாய்க் கொடுத்திருக்கிறார். அதற்கு குர்ட்பகால் என்று பேராம். அது அந்த காலேஜை யொட்டியிருக்கிறதென்றும் ரூபா 60000-விலை மதிப்புள்ளதென்றும் தெரிகிறது.

இங்கிலாந்தில் L. L. B. பட்டம்
பெற்ற ஒரு மலையாளி மாணுக்கன்.

மிஸ்டர் A. C. மாதவன் நம்பியார் சீமையில் கேம்ப்ரிட்ஜ் பரீக்ஷையில் B. A. பட்டம் பெற்று இப்பொழுது L. L. B. பட்டமும் பெற்றிருக்கிறார் என்று கேட்க மிகவும் சந்தோஷிக்கிறோம். இவர் தாம் மலையாளிக்குள் இப்பட்டம் பெற்றவருள் முதலாமவர். இவர் I. C. S. பரீக்ஷைக்கும் போக உத்தேசித்திருக்கிறாராம். அதிலும் முதலாவதாகத் தேறிவருவாரென்று நாம் நம்புகிறோம். இவர் வடமலையாளத்திலுள்ள தனிகரான மிஸ்டர் வெங்காயல் ராமன் நாயரின் மூத்த குமாரரும்: ரிடயிர்டு டிஸ்டிரிகட் ஜட்ஜான மிஸ்டர் A. C. கண்ணன்நாயரின் மருமானுமாம்.

ஒரு நன்கொடை.—அயர் லாண்டில் லார்டுஜீவி என்பர் சில

ஆஸ்பத்திரிகளின் உபயோகத்திற்காக 50000 பவுண்டு நன்கொடை யளித்திருக்கிறனர். இது ஜியார்ஜ் சக்ரவர்த்தியார் வருகையை முன்னிட்டேயாம்.

கப்பல் வேலைக்காரராலுண்டான நஷ்டம்.—கப்பல்வேலைக்காரர்கள் கட்டுப்பாடாக வேலைக்குப் போகாதிருப்பதால் ஹல்நகரத்தில் மாத்திரம் 250000 பவுண்டு நஷ்டமாமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. மான்செஸ்டர் கப்பற் கம்பனியார் மேற்படி வேலைக்காரர்களுடன் கலந்து ஒருமுடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

3000 பவுண்டு வெகுமதி.— சில காலத்திற்கு முன்னர் உலக முற்றும் நடந்து சென்று ஆங்காங்குள்ள அற்புதமான விஷயங்களைக் கண்டு செவ்வையாக அறிவிப்பவர்கட்கு 3000 பவுண்டு வெகுமதி கொடுப்படுமென் றொரு விளம்பரம் செய்யப்பட்டது. இவ்வெகுதியைப்பெற மிஸ்டர் ஹெர் ஹாட்ஸபெல் என்பவர் உலகமுற்றும் நடந்து பார்த்துவருகிறார். இவரிப்போது இரங்கூனில் வந்திருக்கிறார். கல்கத்தாவிலிருந்து இரகூனுக்கு ஒருவாரத்திற் போனாராம்; இனி ஜப்பான், சீனா முதலிய தேசங்கட்குப் போவாராம்.

வாசனை யெண்ணெயால் வந்த கேடுதி.—பிரெஞ்சு தேசத்தில் ஒரு கனவானது மனைவி திராவகத்தாற் கூட்டப்பட்ட வாசனை யெண்ணெயைத் தன் கூந்தலிற்றடவிக் கொள்வது வழக்கம். ஒரு நாளவள் அவ்வாறு தடவிக்கொண்டபிறகு ஒரு நிமித்தம் பற்றி அடுப்பருகிற்சென்ற போது நெருப்புப் பொறிபட்டுக் கூந்தல் குபீரெனப் பற்றிக்கொண்டது. அதனாலவள் ஆஸ்பத்திரியி லிறந்து போனாள்.

1000—ரூபாய் இனாம்.—நமது கவர்ன்மெண்டார் திருநெல்வேலி கலெக்டர் ஆஷியைக் கொன்றதன் காரணத்தையும் அதற்குச் சகாயமாயிருந்தவர்களது பெயரையும் தெரிவிப்பவர்கட்கு ஆயிரம் ரூபாய் இனாம் தருவதாக விளம்பரஞ் செய்திருக்கின்றார்கள்.

நீரிலும் நெருப்பச் செல்லும்:—சர்வில்லியம் ராம்ஸே என்னுமொரு ரசாயன சாஸ்திரி, மேஜையின் மீது தண்ணீர்ப் பாத்திரத்தை வைத்துவிட்டுவேறு வேலையாயுள்ள போது சூரிய கிரணம் அத்தண்ணீரின் வாயிலாகக் கீழேசென்று அந்தமேஜையினடிப் பாகத்தை யெரித்துத் தொளையாக்கி விட்டதாம்

சக்ரவர்த்தினியின் ஏழாவதாண்டு விஜயம்.

கனவான்களே! பத்திரிகாபி மானிகளே!

சர்வலோக சரண்யனும் சர்வக்ஞனும் சர்வவியாபகனு மாகிய இறைவனது திருவருளால், நமது சக்ரவர்த்தினி யென்னும் பெண்மணிச் செல்வி ஆறுவதாண்டைக் கடந்து ஏழாவ தாண்டடைந்து ஞாலமுழுதும் ஓடிவிளையாடத் தொடங்கி யிருக்கின்றனள்.

கடந்த ஆறுவருஷங்களிலும் "ஓதுவதொழியேல்" என்பதை அடிக்கடி ஞாகப்படுத்துவதன் நோக்கமாகச் சாஸ்வதிதேவியே மாந்தர்பாற் கருணை கூர்ந்து சக்ரவர்த்தினி யெனப் போந்தன ளென்று கூறும் வண்ணம், பிரதிமாதமும் தவறுமல் நம் தமிழ் நாட்டில் தன்னை மதித்து வரவேற்கும் இல்லங்தோறும் சென்று அவர்கள் மகிழ்வுறுமாறு கல்வியின் மாட்சியை விளக்கிவந்தனள். இனியும் தன்னுடைய முக்கிய நோக்கமாகிய "ஸ்திரீ வித்தியாபி விர்த்தி" நமது நாட்டில் குறைவுறு தோங்கச் சிறிதுந் தளர் வுருமலும் தன்னுடைய சிரமத்தைச் சிறிதும் பாராட்டாமலும் உழைக்கத் துணிந்து முன் வந்திருக்கின்றனள்.

இகபர சாதகங்களைக் கொடுக்கும் கல்வியைப் போதிக்க வந்துலாவும் சக்ரவர்த்தினி யென்னும் பெண்மணியைக் காணுந் தோறும் நன்முகமன் கூறி வரவேற்று அவள் கொண்ட உன்னத மான நோக்கம் நிறைவேற உதவிபுரிய வேண்டுமெனப் பிரார்த் திக்கின்றனம்.

இது வரையில் எமது "சக்ரவர்த்தினியை" ஏற்றுச் சந் தோஷப்படுத்திய கவர்ண்மெண்டார் அவர்களுக்கும் நம் தமிழ் நாட்டுக் கனவான்களுக்கும் மனப்பூர்வமான வந்தனமளிக் கின்ருேம்.

பத்திராதிபர்.